இயல் ஐந்து

# ஊடகவியல்

296KL3




மனித நாகரிக வளர்ச்சியில் தகவல் தொடர்பின் பங்கு முக்கியமானது. ஒவ்வொரு தனிமனிதனின் வளர்ச்சிக்கும் சமூக மேம்பாட்டிற்கும் ஊடகங்களின் பணி இன்றியமையாதது.

ஊடகங்கள் அச்சு ஊடகங்கள், மின்னணு ஊடகங்கள் என இரண்டு வகைப்படும். பதினோராம் வகுப்பில் அச்சு ஊடகங்கள் பற்றிய செய்திகள் இடம்பெற்றிருந்தன . இவ்வாண்டு மின்னணு ஊடகங்களான வானொலி, தொலைக்காட்சி ஆகியவற்றின் தோற்றம், வளர்ச்சி, உள்கட்டமைப்பு, நிகழ்ச்சி உருவாக்கம் ஆகிய செய்திகள் இடம்பெற்றுள்ளன. மேலும் ஊடகச் சட்டங்கள் குறித்தும் மின்னணு ஊடக ஆளுமைகள் குறித்தும் இப்பாடப்பகுதி பேசுகிறது.

## கற்றல் நோக்கங்கள்

- *மின்னணு ஊடகங்கள் பற்றி அறிந்துகொள்ளுதல்.*
- *பேரிடர்க் காலத்தில் வானொலி ஆற்றுகின்ற இன்றியமையாப் பணி குறித்து அறிதல்.*
- *தொலைக்காட்சியில் ஒளிபரப்பாகும் நிகழ்ச்சிகளின் பயன்பாடுகளைப் புரிந்துகொள்ளுதல்.*
- *ஊடகச் சட்டங்கள் பற்றி விழிப்புணர்வு பெறுதல்.*
- *மின்னணு ஊடக ஆளுமைகளின் பங்களிப்பைத் தெரிந்து கொள்ளுதல்.*
- *வானொலி, தொலைக்காட்சி ஆகியவற்றுக்கான நிகழ்ச்சிகளை உருவாக்கும் திறன் பெறுதல்.*
- *இணைய ஊடகங்களை அறிந்து ஆக்க வழியில் பயன்படுத்துதல்.*

## பாடப் பகுதி

- மின்னணு ஊடகங்கள்
- வானொலி மற்றும் தொலைக்காட்சி – உள்கட்டமைப்பு
- ஊடகவியல் சட்டங்கள்
- மின்னணு ஊடக ஆளுமைகள்

## இயல் ஐந்து

# மின்னணு ஊடகங்கள்

வானொலி, தொலைக்காட்சி, இணையம் முதலானவை மின்னணு ஊடகங்களாக அறியப்படுகின்றன. ஆற்றல் வாய்ந்த ஊடகமாக வானொலி இருந்தது. அதன்பின் தோன்றிய தொலைக்காட்சி மக்களிடம் பெரும் செல்வாக்குப் பெற்ற ஊடகமாக இருந்துவருகிறது. தற்போது இணையத்தில் கிடைக்கும் வலைப்பூ, முகநூல், கீச்சகம், புலனம் முதலான சமூக ஊடகங்கள் மக்களால் பெரிதும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

### வானொலி

மக்களுக்கான தொடர்பியல் சாதனமாக முதலில் தோன்றியது வானொலியே. ஊடகமானது தொலைக்காட்சி, இணையம் எனப் பல முன்னேற்றங்களைக் கண்டாலும் வானொலி தனக்கென ஓர் இடத்தை உருவாக்கிக்கொண்டு இன்றளவிலும் பயணித்து வருகிறது.



### வானொலியின் தோற்றம்

இத்தாலி நாட்டு அறிஞர் குலீல்மோ மார்கோனி வானொலியைக் கண்டுபிடிக்கும் முயற்சியில் ஈடுபட்டார். அதற்காகத் தம் வீட்டையே ஆராய்ச்சிக்கூடமாக மாற்றினார். நெடுநாள்களாக நடைபெற்ற ஆராய்ச்சியின் முடிவாகக் கம்பியில்லாத் தந்தி முறையில் செய்திகளைத் தொலைதூரத்திற்கு அனுப்பும் முயற்சியில் வெற்றி பெற்றார். இக்கண்டுபிடிப்பை இங்கிலாந்து அறிவியல் கழகத்தில் பதிவு செய்தார்.

1896ஆம் ஆண்டு மார்கோனி கம்பியில்லாத் தந்தியை கண்டுபிடித்தார். 1897ஆம் ஆண்டு கம்பியில்லாத் தந்தி சேவை நிறுவனத்தைத் தொடங்கினார். ஒலிபரப்பிற்குத் தேவையான கருவிகளையும் அவரே உருவாக்கினார். அட்லாண்டிக் கடலின் குறுக்கே கார்ன்வாலிஷில் இருந்து நியூபவுண்டுலாந்து (New Founland) வரை செய்திகளை அனுப்பினார். இதற்காக இவருக்கு 1909 ஆம் ஆண்டு இயற்பியல் துறைக்கான நோபல் பரிசு வழங்கப்பட்டது. ஏற்கெனவே இந்த ஆய்வில் ஈடுபட்டிருந்த பெர்டினாண்ட் பிரவுன் என்ற ஜெர்மானிய அறிஞரும் இவருடன் இணைந்து இப்பரிசினைப் பகிர்ந்துகொண்டார். மார்கோனி தமது அடுத்தடுத்த முயற்சியின் விளைவாக 1800 மைல் தொலைவிற்குச் செய்திகளை அனுப்பி வெற்றிகண்டார். இதனால் இவர் வானொலியின் தந்தை என அழைக்கப்படுகிறார்.



குலீல்மோ மார்கோனி



12th ADVNCEl Tamil - Chap 5&6.indd 206 14-04-2020 18:51:52

உலகத்தின் முதல் வானொலி நிலையம் 1920 ஆம் ஆண்டு அமெரிக்காவின் பீட்ஸ்பர்க் நகரில் தொடங்கப்பட்டது. "அமெரிக்க ஜனாதிபதியாக ஹார்டிங்ஸ் தேர்ந்தெடுக்கப்பட்டார்" என்பதே இதில் ஒலிபரப்பப்பட்ட முதல் செய்தியாகும்.

## இந்திய வானொலி

இந்தியாவின் முதல் வானொலி ஒலிபரப்பு நிலையம் சென்னையில் மாநில வானொலிக் குழுவால் 1924ஆம் ஆண்டு ஜூலை 31இல் தொடங்கப்பட்டது. தனியார் நிறுவனத்திடமிருந்த ஒலிபரப்புச் சேவையை இந்திய அரசு ஒலிபரப்புத்துறை (Indian State Broad casting Service-ISBS) தனது கட்டுப்பாட்டின்கீழ் கொண்டு வந்தது. இது 1936இல் அகில இந்திய வானொலி (All India Radio) எனப் பெயர்மாற்றம் பெற்றது. பின்னர் 1957-முதல் ஆகாசவாணி என்றும் அழைக்கப்பட்டு வருகிறது.

இந்தியா விடுதலை பெற்ற பிறகு இந்திய வளத்தையும் பொருளாதாரத்தையும் மேம்படுத்தும் வகையில் ஐந்தாண்டுத்திட்டங்கள் வகுக்கப்பட்டு வளர்ச்சிப் பணிகளுக்கென நிதிகள் ஒதுக்கப்பட்டன. இதில் வானொலிச் சேவையினை விரிவுபடுத்தும் பணிக்காக ஒவ்வோர் ஐந்தாண்டுத் திட்டத்திலும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுப் புதிய வானொலி நிலையங்களும் ஒலிபரப்புக் கோபுரங்களும் அமைக்கப்பட்டன.

மேலும் குழந்தைகள், சிறுவர்கள், இளைஞர்கள், பெண்களுக்கான சிறப்பு நிகழ்ச்சிகள், கல்வி நிகழ்ச்சிகள், வேளாண்மை, விளையாட்டு என வானொலி தனது நிகழ்ச்சிகளின் எல்லையை விரிவுபடுத்திக்கொண்டது.

## வானொலி சேவை

இந்திய நாட்டில் வானொலி அறிமுகமான நாள்முதல் இன்றுவரை பல்வேறு விதமான நிகழ்ச்சிகள் ஒலிபரப்பப்படுகின்றன. தேசிய ஒலிபரப்பு, மாநில மொழி ஒலிபரப்பு, வர்த்தக ஒலிபரப்பு போன்ற சேவைகள் வழங்கப்பட்டு வருகின்றன. பாராளுமன்ற நிகழ்வுகள் நேரலையாக ஒலிபரப்பப்படுகின்றன.

### அறிவோம் தெளிவோம்

**பேரிடர்க்காலமும் ஹாம் வானொலியும்**

இயற்கைப் பேரிடர்க் காலங்களில் மக்கள் தகவல்களைப் பெறுவதற்கும் தெரிவிப்பதற்கும் ஹாம் வானொலி அல்லது அமெச்சூர் வானொலி பயன்படுத்தப்படுகிறது. இந்த ஹாம் வானொலியில் தகவல்களைப் பெறவும் ஒலிபரப்பவும் முடியும். இயற்கைப் பேரிடர்க் காலங்களில் தொலைத்தொடர்புச் சாதனங்கள் அறவே செயலற்றுவிடுகின்றன. அச்சூழலில் நமக்குக் கை கொடுத்து உதவுவது, ஹாம் வானொலிகள் மட்டுமே. இன்று அமெரிக்கா, ஜப்பான் போன்ற வளர்ந்த நாடுகளில் அனைத்து வீடுகளிலும், ஹாம் வானொலி உரிமம் பெற்றுப் பயன்படுத்தி வருகின்றனர். இதனால் இயற்கைச் சீற்றங்களை இவர்களால் எளிதாக எதிர்கொள்ள முடிகிறது.



ஹாம் வானொலியினைப் பெறுவதற்கான வழிமுறைகளை www.wpc.dot.gov.in/exam_amatr.asp என்னும் இணையத் தளத்தில் காணலாம்.

## பண்பலை

வானொலி தொழில்நுட்பத்தின் அடுத்தகட்ட வளர்ச்சி நிலை பண்பலை (FM). பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளை மையப்படுத்தித் தொடங்கப்பட்டவையே பண்பலைகள். இவை வானொலி வருணனையாளர்களை (ரேடியோ ஜாக்கி) முதன்மையாகக் கொண்டு இயங்கி வருகின்றன. அரசு பண்பலை நிலையங்களும் முறையான உரிமம் பெற்ற தனியார் பண்பலை நிலையங்களும் உலகெங்கிலும் தமது ஒலிபரப்புச் சேவையினைச் சிறப்பாகச் செய்துவருகின்றன.



12th ADVNCEl Tamil - Chap 5&6.indd 207 14-04-2020 18:51:52

## இணையத்தள வானொலி

இணையத்தள வானொலியினை யார்வேண்டுமானாலும் தொடங்கி நடத்திட இயலும். சமூகத்திற்குச் சொல்லவேண்டிய செய்திகளும் கருத்துவளமும் ஆர்வமும் வானொலி அறிவும் நம்மிடம் இருந்தால் நாமும் ஓர் இணைய வானொலியினைத் தொடங்கி நடத்தலாம். இணையத்தளத்தின் நவீனத் தொழில்நுட்பம் இணையத்தள வானொலி ஒலிபரப்பிற்கு வழிவகை செய்கிறது.

வானொலி இசைப்பிரியர்களுக்கென பாட்காஸ்ட் (Podcast) போன்ற இணையத்தள சேவைகள் உள்ளன. இவற்றுடன் ஸ்பிரிக்கர் (http://www.spreaker.com/) போன்ற இணையத்தளங்கள் இணைய வானொலியைத் தொடங்குவதற்கான வசதிகளை வழங்குகின்றன. இவ்விணையத்தளத்தில் வானொலி சேவையினைத் தொடங்க தங்களை உறுப்பினராக இணைத்துக்கொள்ளவேண்டும். இங்கு வானொலி நடத்துபவர்களுக்கெனத் தனிப்பக்கமும் ஒதுக்கப்படுகிறது.

## தொலைக்காட்சி

கம்பி வழியாகவோ மின்னலைகள் வழியாகவோ அசையும் அல்லது அசையாப் பொருள்களின் காட்சிகளை ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்குக் கொண்டு சென்று காட்சிப்படுத்தும் சாதனமே தொலைக்காட்சியாகும்.

தொலைக்காட்சிசேவைகளைக் காண்பதற்கு உதவும் மூன்று கருவிகள்:

1. படப்பிடிப்புக் கருவி (Camera)

2. பிடிக்கப்பட்டப் படத்தினை மின்னலைகளாக மாற்றித் தொலைதூரத்திற்கு அனுப்பும் கோபுரம் (Transmitting tower)

### அறிவோம் தெளிவோம்


### திறன்பேசியில் வானொலி தொடங்குதல்


வானொலி தொடங்குவதற்கான வழிமுறைகள்.


1. கொடுக்கப்பட்டுள்ள http://Anchor.fm என்னும் இணையப் பக்கத்திற்குச் செல்க.


2. இப்போது திரையில் தோன்றும் Get Started Now என்னும் சுட்டியைச் சொடுக்கவும். உங்களுக்கான தனியான கணக்கினை உங்கள் மின் அஞ்சல் முகவரி கொண்டு தொடங்கவும்.

வானொலிக்கான பெயரினைத் தேர்வு செய்யவும். இப்பொழுது Add Audio என்னும் சுட்டியைத் தட்டி உங்களின் குரலில் பதிவு (record) செய்யவும்.






*3. அனுப்பப்பட்ட மின்னலைகளை வாங்கி, அவற்றைப் படமாகவும் ஒலியாகவும் மாற்றித்தரும் தொலைக்காட்சிப் பெட்டி (Reciever – T.V)*

## தொலைக்காட்சியின் தோற்றம்

*இங்கிலாந்து நாட்டைச் சார்ந்த ஜான் லெகி பெயர்டு (John legie baird) காட்சி ஒளிபரப்பு பற்றி அறிந்துகொள்வதில் மிகுந்த ஆர்வம் கொண்டிருந்தார். இவர் கம்பியில்லாத் தந்திக் கருவி மற்றும் சில மின்கலன்களுடன் ஆராய்ச்சியில் ஈடுபட்டார். இவ்வாய்வின் விளைவாக ஒரு பொம்மையின் உருவத்தை ஓர் அறையிலிருந்து மற்றோர் அறைக்கு அனுப்பி வெற்றி கண்டார். ஒரு சிறுவனைத் தமது படம் பிடிக்கும் கருவி முன் நிறுத்தி, அவனது கை, கால்களை அசைக்க வைத்து அக்காட்சியினை ஒளிபரப்பி மகிழ்ந்தார். தனது இந்த அரிய கண்டுபிடிப்பை இலண்டனில் உள்ள ராயல் குழுமத்தில் பதிவு செய்துகொண்டார்.*

*முதன்முதலாகப் பொதுமக்கள் கண்டுகளிக்கும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் இங்கிலாந்து நாட்டின் தலைநகரான இலண்டனில் ஒளிபரப்பப்பட்டன. அது கறுப்பு, வெள்ளை நிறக் (Black and White) காட்சி ஒளிபரப்பாகும். பின்னர், அமெரிக்காவில் வண்ணநிற (Colour) ஒளிபரப்பு தொடங்கப் பட்டது.*


ஜான் லெகி பெயர்டு

*தொடக்ககாலத்தில் படம்பிடிக்கும்கருவியின் முன் நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு நேரடியாக ஒளிபரப்பப்பட்டன. 1956 இல் அமெரிக்காவின் 'ஆம்பெக்ஸ்' நிறுவனம் நிகழ்ச்சிகளைப் பதிவுசெய்து, தேவைப்படும்போது காட்சிப்படுத்தும் ஒளிப்பதிவு நாடா (VTR-Video Tape Recorder) என்ற கருவியை உருவாக்கியது. அதன்பிறகு நவீனத் தொழில்நுட்பம் கொண்ட படப்பிடிப்புக் கருவிகள் கண்டுபிடிக்கப்பட்டன. தற்காலத்தில் தொலைக்காட்சி ஒளிபரப்புகள் முழுமையாக எண்ணிம (Digital) வடிவத்திற்கு மாற்றப்பட்டுவிட்டன. இதனால் காட்சிகளைத் தெளிவாகவும் துல்லியமாகவும் காணமுடிகிறது.*

## இந்தியாவில் தொலைக்காட்சி

*இந்தியாவில் முதன்முதலில் தொலைக்காட்சி 1959-இல் புதுதில்லியில் தொடங்கப்பட்டது. முதலில் நிகழ்ச்சிகள் கறுப்பு வெள்ளை நிறத்தில் ஒளிபரப்பாயின. பின்பு, 1982ஆம் ஆண்டு ஆகஸ்ட் 15 ஆம் நாள் வண்ணத் தொலைக்காட்சியாக வளர்ச்சி பெற்றது. இவ்வண்ணத் தொலைக்காட்சியில் இந்திரா காந்தி அம்மையாரின் சுதந்திரதினவிழாப் பேருரையே முதல் நிகழ்ச்சியாக அமைந்தது.*

## வானொலி, தொலைக்காட்சி சேவைகள்

*வானொலியும் தொலைக்காட்சியும் தகவல்களைத் தரும் தகவல் தொடர்பு ஊடகங்களாக மட்டுமல்லாமல் கல்வி, வேளாண்மை, அறிவியல், மருத்துவம், விளையாட்டு முதலான பல்வேறு துறைசார்ந்த அறிவையும் கொண்டு செல்லும் அறிவுசார் ஊடகங்களாகவும் திகழ்கின்றன.*

## உழவர் நிகழ்ச்சிகள்

*வானொலியில் பண்ணைச் செய்திகளும், உழவர்கள் மற்றும் விரிவாக்கப் பணியாளர்களுக்கான அறிவிப்புகளும் இடம்பெற்று வருகின்றன.*

*வானொலியில் உழவர் நிகழ்ச்சி மூலமாக விதைகள் அறிமுகம், பயிர்கள் பராமரிப்பு, பயிர்களைத் தாக்கும் நோய்கள், தடுக்கும் முறைகள் முதலியவற்றிற்கு வேளாண் விரிவாக்க அலுவலர்கள் விளக்கம் அளிக்கின்றனர். மேலும் வேளாண் திட்டங்கள், அரசின் கடன் உதவிகள், நீர் மேலாண்மை, கால்நடை வளர்ப்பு, சிற்றூர்*

வளர்ச்சிப் பணிகள், குடிசைத் தொழில்கள் எனப் பல்வேறு செய்திகளை வானொலி, உழவர்களுக்காக ஒலிபரப்பி வருகிறது.



பல்வேறு நிகழ்ச்சிகள் தொலைக்காட்சிகளிலும் ஒளிபரப்பப்படுகின்றன. பொதிகைத் தொலைக்காட்சியில் பண்ணை இல்லம், வயலும் வாழ்வும், பொன்விளையும் பூமி முதலான பல்வேறு தலைப்புகளில் இயற்கை வேளாண்மை, அதிக விளைச்சல் பெறுவதற்கான வழிமுறைகள், வேளாண் தொழில்சார்ந்த நவீனத் தொழில்நுட்பங்கள் போன்ற நிகழ்ச்சிகள் ஒலிபரப்பப்படுகின்றன.

### உரைச்சித்திரம்

வானொலி உரை நிகழ்த்துபவர் தாம் எடுத்துக்கொண்ட பொருளினைச் சித்திரித்து உரைக்கும்போது அது உரைச்சித்திரமாகிறது. இவ்வாறு வழங்கும் உரைச்சித்திரம் கேட்பவர்களின் ஆர்வத்தைத் தூண்டும். மேலும் கேள்விப்பொருளானது காட்சிப்பொருளாக

**அறிவோம் தெளிவோம்**

**வானொலி**

டி.கே. சிதம்பரனார் "ரேடியோ" என்ற சொல்லுக்குத் தமிழில் வானொலி என்ற சொல்லை முன்மொழிந்தார். ஆல் இந்தியா ரேடியோ, ஆகாஷவாணி என்று முழங்கி வந்த நிலையில் முதன்முதலில் திருச்சி வானொலி நிலையம் 1959இல் திருச்சி வானொலி நிலையம் என்று அறிவித்தது. அதன்பிறகு வானொலி என்ற சொல்லை அனைவரும் பயன்படுத்தத் தொடங்கினர்.

மனக்கண்ணில் தோன்றி நேயர்களை மகிழ்விக்கும்.

இரண்டாம் உலகப்போரின் போது மக்களுக்கு உண்மை நிலையினை உணர்த்தி நம்பிக்கை ஊட்டுவதற்காக, வானொலி உரைச்சித்திரங்கள் முதன்முதலாக ஒலிபரப்பாயின. தேசிய நெருக்கடிக் காலங்களில் மக்களிடையே ஒற்றுமையையும் நம்பிக்கையையும் வளர்க்கும் விதமாக உரைச்சித்திரங்கள் நிகழ்த்தப்பட்டன. விழாக்கள், வழிபாட்டுத் தலங்கள் பற்றிய உரைச்சித்திரங்களும் வானொலியில் ஒலிபரப்பப்படுகின்றன.

கவிதை, இசை, பலகுரல், வருணனை, உணர்ச்சிக்கேற்ப குரல் ஏற்ற இறக்கம் எனப் பல உத்திகளைக் கொண்டு நேயர்களைத் தன்வயப்படுத்தும் வகையில் வானொலி உரைச்சித்திரங்கள் அமைந்திருக்கும்.

தொலைக்காட்சிகளிலும் இது போன்றே நேரலை ஒளிபரப்பாக உரைச்சித்திரங்கள் ஒளிபரப்பப்படுகின்றன. தேசிய மற்றும் மாநில அரசு விழாக்கள், கோவில் திருவிழாக்கள், குடமுழுக்கு, விளையாட்டுப் போட்டிகள் போன்றவற்றைக் காட்சிகளோடு வருணனையாளர்கள் தொகுத்து வழங்குவர். இந்நேரலை ஒளிபரப்புகள் நிகழ்வுகளை நேரடியாகக் காணும் அனுபவத்தை மக்களுக்கு வழங்குகின்றன.

### தொழிலாளர் நிகழ்ச்சிகள்

தொழிற்சாலைகளில் பணிபுரியும் நகர்ப்புற மக்களுக்காகத் தொழிலாளர் நிகழ்ச்சிகள் தொடங்கப்பட்டன. நாளடைவில் அவை கிராமப்புற மக்களுக்கும் பயன்படும் வகையில் விரிவுபடுத்தப்பட்டன. ஒவ்வொரு மாநிலத்திலும் அங்கு நடைபெறும் தொழில்களை மையப்படுத்தி தொழிலாளர் நிகழ்ச்சிகள் வானொலி மற்றும் தொலைக்காட்சிகளில் நிகழ்த்தப்படுகின்றன. இந்நிகழ்ச்சிகளில் புதிய தொழில் பற்றிய அறிமுகம், தொழில் முன்னேற்றம் தொடர்பான வழிகாட்டுதல்கள், தொழிலாளர் நலத்திட்டங்கள் முதலானவை இடம்பெறுகின்றன.



12th ADVNCEl Tamil - Chap 5&6.indd 210 14-04-2020 18:51:53

## கல்வி நிகழ்ச்சிகள்

பள்ளி, கல்லூரி, பல்கலைக்கழக மாணவர்களுக்கும், அஞ்சல்வழிக் கல்வி மற்றும் தொலைதூரக் கல்வி பயிலும் மாணவர்களுக்கும் ஏற்ற வகையில் கல்வி ஒலிபரப்பில் வானொலி ஊடகம் மிகச்சிறந்த தொண்டாற்றி வருகிறது.




கல்வியைத் தரமானதாக்கவும் பரவலாக்கவும் கிராம மற்றும் நகரப் புறங்களுக்கிடையே உள்ள இடைவெளியைக் குறைக்கவும் தொலைக்காட்சி ஒரு சிறந்த ஊடகமாக அறியப்படுகிறது. 1976 ஆம் ஆண்டு நிறைவுற்ற சைட் (SITE) திட்டம் இதற்கான ஆய்வு உறுதிகளை வழங்கியது. இதனால் ஊக்கம் பெற்ற இந்தியக் கல்வியாளர்கள் தொலைக்காட்சியைக் கல்வி வளர்ச்சிக்கான ஓர் ஊடகமாக மாற்றும் முயற்சிகளில் ஈடுபட்டனர். 1983 இல் இன்சாட் 1பி என்ற தொலைத்தொடர்பு செயற்கைக்கோள் ஏவப்பட்டதன் காரணமாக நாட்டில் மண்டல ஒளிபரப்புகள் தொடங்கப்பட்டன. அனைத்துத் தொலைக்காட்சி ஒளிபரப்பு நிலையங்களும் ஒன்றோடொன்று இணைக்கப்பட்டன. இதன் காரணமாக இவ்வசதியைப் பயன்படுத்தி நாடெங்குமுள்ள கல்லூரி மாணவர்களுக்குப் பொதுவான கல்வி நிகழ்ச்சிகள் வழங்கத் திட்டமிடப்பட்டது.

பல்கலைக்கழக நிதி நல்கைக் குழு நாள்தோறும் ஒரு மணி நேரம் உயர் கல்வி நிகழ்ச்சிகள் வழங்கும் 'நாடெங்கும் கல்லூரி வகுப்பு' என்னும் கல்வித் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் தூர்தர்சனுடன் இணைந்து வழங்கத்தொடங்கியது. இத்திட்டம் 1984 ஆகஸ்ட் 15 ஆம் நாள் தொடங்கி வைக்கப்பட்டது. விடுமுறை தினங்களைத் தவிர ஏனைய நாள்களில் மதியம் 1 மணிமுதல் 2 மணிவரை இக்கல்வி நிகழ்ச்சிகள் ஒளிபரப்பப்பட்டன. மாலையில் 4 மணிமுதல் 5 மணிவரை மறு ஒளிபரப்பும் செய்யப்பட்டது.

தமிழக அரசு கல்வி ஒளிபரப்பிற்கென 2019ஆம் ஆண்டு சனவரி 21ஆம் நாள் தொலைக்காட்சி நிலையம் ஒன்றைத் தொடங்கி, நிகழ்ச்சிகளை ஒளிபரப்பி வருகிறது. இதன் மூலம் அனைத்துத் தரப்பு மக்களும் கல்வி தொடர்பான தங்களது ஐயங்களைக் கேட்டுத் தெளிவுபெறலாம். பள்ளிக் கல்வித்துறையின் செயல்பாடுகள், போட்டித்தேர்வுகளுக்கான பயிற்சிகள், வழிகாட்டுதல்கள் மற்றும் அரசின் நலத்திட்டங்கள் உள்ளிட்ட பல்வேறு நிகழ்ச்சிகள் இதில் ஒளிபரப்பாகின்றன.

## பெண்களுக்கான நிகழ்ச்சிகள்.

ஐ.நா. அவை 1975ஆம் ஆண்டை உலகப் பெண்கள் ஆண்டாக அறிவித்தது. அவ்வாண்டில் இந்திய வானொலி நிலையங்கள் அனைத்திலும் பெண்களுக்கான சிறப்பு நிகழ்ச்சிகள் தொடங்கப்பட்டன. பெண்களின் மன நலம், உடல் நலம் பேணும் நிகழ்ச்சிகளும் அவர்களின் உரிமைகள் சார்ந்த நிகழ்ச்சிகளும் தொலைக்காட்சிகளில் ஒளிபரப்பப்படுகின்றன.

### அறிவோம் தெளிவோம்

**இந்தியத் தொலைத்தொடர்பு ஒழுங்குமுறை ஆணையம்**
**(TRAI – Telecom Regulatory Authority of India)**

இந்தியாவில் தொலைத் தொடர்புச் சேவைகளையும் கட்டணத்தையும் ஒழுங்குபடுத்த பாராளுமன்ற சட்டம் 1997 இன் 3 ஆவது பிரிவு வழிவகை செய்கிறது. அதன்படி 1997 பிப்ரவரி 20 அன்று இந்தியாவின் தொலைத் தொடர்பு ஒழுங்குமுறை ஆணையம் (TRAI) நிறுவப்பட்டது. தொலைத்தொடர்புச் சேவைகளையும் சுங்க வரி விதிப்புகளையும் இவ்வாணையம் மேற்பார்வை செய்துவருகிறது.



12th ADVNCEl Tamil - Chap 5&6.indd 211 14-04-2020 18:51:53

## விளையாட்டு நிகழ்ச்சிகள்

இளைஞர்களால் பெரிதும் விரும்பப்படும் நிகழ்ச்சிகளாக விளையாட்டு நிகழ்ச்சிகள் அமைந்துள்ளன. உலக அளவில் நடைபெறும் மட்டைப்பந்து (கிரிக்கெட்), கால்பந்து, இறகுப் பந்து, சடுகுடு முதலான விளையாட்டுப் போட்டிகளைத்தொலைக்காட்சிகள் நேரலையாக ஒளிபரப்புகின்றன. இதற்கெனத் தனியே 24 மணிநேர விளையாட்டு அலைவரிசைகள் இயங்கி வருகின்றன. எடுத்துக்காட்டாக டிடி.ஸ்போர்ட்ஸ், ஸ்டார் ஸ்போர்ட்ஸ், டென் ஸ்போர்ட்ஸ் போன்ற சில தொலைக்காட்சிகளைக் குறிப்பிடலாம். முக்கியமான விளையாட்டுப் போட்டிகளை வானொலி நிலையங்களும் நேரலையாக ஒலிபரப்புகின்றன.

## கலை மற்றும் பண்பாட்டு நிகழ்ச்சிகள்

குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை பங்குபெறும் கலைநிகழ்ச்சிகள் தொலைக்காட்சிகளில் ஒளிபரப்பப்படுகின்றன. நடனம், நாட்டியம், இசை, பாடல், பலகுரல் முதலான தனித்திறமைகளை வெளிப்படுத்துவதற்கான களமாக இவ்வகைத் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் அமைந்துள்ளன. இதற்காகத் தனியே போட்டிகள் நடத்தப்பட்டுப் பரிசுகளும் விருதுகளும் வழங்கப்படுகின்றன.

தொலைக்காட்சிகளில், தமிழர் பண்பாட்டைப் போற்றும் வகையில் கிராமியக் கலைகளில் சிறந்து விளங்கும் கலைஞர்களைக் கொண்டு கலைநிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன. விழாக்காலங்களில் விழாவின் பெருமையினைப் போற்றும் வகையிலும் நேயர்களை மகிழ்விக்கும் வகையில் தொலைக்காட்சிக் கலைஞர்களால் சிறப்பு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு ஒளிபரப்பப்படுகின்றன.

வானொலியில் நிகழ்த்தப்படும் நாட்டுப்புற இசை, கர்நாடக இசை, கிராமியக் கலைகள் போன்றவற்றிற்கெனத் திரளான நேயர்கள் இருப்பது குறிப்பிடத்தக்கது.

## இலக்கிய நிகழ்ச்சிகள்

இலக்கியம் மனித வாழ்வோடு இணைந்த ஒன்றாக உள்ளது. அறிவை மேம்படுத்திப் புதுமைகளை விளைவிப்பனவும், மனித மாண்புகளை வளப்படுத்தி மகிழ்ச்சியைத் தருவனவும் இலக்கியங்களே. இத்தகைய இலக்கியங்களை மக்களுக்குச் சுவைபட வழங்குவதில்தொலைக்காட்சியும்வானொலியும் பெரும்பங்காற்றுகின்றன.

தொலைக்காட்சியில் ஒளிபரப்பாகும் சில இலக்கிய நிகழ்ச்சிகள்

### 1. கவியரங்கம்

இளம் கவிஞர்களுக்கான வெளிப்பாட்டுக் களங்களாகக் கவியரங்கங்கள் திகழ்கின்றன. அவர்களது படைப்புத்திறனை உலகறியச் செய்வதில் தொலைக்காட்சியின் பங்கு போற்றுதலுக்குரியதாகும்.



### உங்களுக்குத் தெரியுமா?

1. உலகத் தொலைக்காட்சி தினம் – நவம்பர் –21
2. வானொலி அதிர்வெண்ணைக் கண்டுபிடித்தவர் – ஹெய்ன்ரீச் ருடோல்ஃப் ஹெட்ஸ்
3. அகில இந்திய வானொலியின் தலைமையிடம் – ஆகாஷ்வாணி பவன், புதுதில்லி
4. அகில இந்திய வானொலியின் பொன்மொழி – 'பகுஜன் ஹிதயா, பகுஜன் சுகயா'
5. பண்பலை வானொலி ஒலிபரப்புமுறையைக் கண்டுபிடித்தவர் – எட்வின் எச். ஆம்ஸ்ட்ராங்
6. தூர்தர்சனின் பொன்மொழி – சத்தியம் சிவம் சுந்தரம்
7. அகில இந்திய வானொலியின் தலைப்பு இசையை அமைத்தவர் – பண்டிட் ரவி சங்கர்
8. பொது ஒலிபரப்புநாள் கொண்டாடப்படும் தினம் – நவம்பர் – 12
9. மக்களவைத் தொலைக்காட்சி தொடங்கப்பட்ட ஆண்டு – 2004
10. உலக பொம்மலாட்ட தினம் – மார்ச் 21
11. உலக வானொலி தினம் – பிப்ரவரி 13



12th ADVNCEl Tamil - Chap 5&6.indd 212 14-04-2020 18:51:53

## 2. பட்டிமன்றம்

இலக்கியங்களில் பொதிந்துள்ள கருத்துகளைப் பன்முக நோக்கில் ஆராயும் களமாகத் தொலைக்காட்சிப் பட்டிமன்றங்கள் விளங்குகின்றன. இதன்மூலம், இலக்கியம் தனது அடுத்த நிலையினை நோக்கி நகரத் தொடங்குகிறது எனலாம்.

## 3. வழக்காடு மன்றம்

ஓர் இலக்கியம் படைக்கப்பட்டதற்கான நோக்கத்தினை முன்வைத்துப் பல்வேறு கோணங்களில் இருவர் விவாதிக்கும் வழக்காடு மன்ற நிகழ்ச்சிகள் தொலைக்காட்சியில் ஒளிபரப்பாகின்றன.

## 4. சொற்பொழிவு

சிறந்த மேடைப் பேச்சாளர்களின் சொற்பொழிவுகள் நேரலையாகவும் பதிவு செய்யப்பட்டும் தொலைக்காட்சிகளில் ஒளிபரப்பப்படுகின்றன. இதன்மூலம் நற்பண்புகளை வளர்க்கும் சான்றோர் பெருமக்களின் சிந்தனைகள் மக்களைச் சென்றடைகின்றன.

## 5. தனிஉரை

சான்றோர் பெருமக்களால் நிகழ்த்தப்படும் தனி உரைகள் தொடர் நிகழ்ச்சியாகவோ விழாக்காலச் சிறப்பு நிகழ்ச்சியாகவோ ஒளிபரப்பாகின்றன.

## 6. மன்ற நிகழ்ச்சிகள்

கம்பன் கழகம் போன்ற தமிழ் இலக்கிய அமைப்புகள் நடத்தும் சிறப்பு நிகழ்ச்சிகள் நேரலையாகவும் பதிவு செய்தும் ஒளிபரப்பப்படுகின்றன.

## 7. கருத்தரங்கம்

இலக்கியங்களில் காணப்படும் சிறப்பான கருத்துகளை முன்வைத்து அதற்கு விரிவு காணும் நோக்கில் கருத்தரங்கங்கள் நடத்தப்படுகின்றன. இக்கருத்தரங்க நிகழ்வுகளை மக்களிடையே கொண்டு சேர்க்கும் பணியினைத் தொலைக்காட்சிகள் செய்து வருகின்றன.

இவை போன்ற பல்வேறு நிகழ்ச்சிகளின் வாயிலாகத் தொலைக்காட்சிகள் இலக்கியங்களின் பன்முகதன்மையை உலகிற்குப் பறைசாற்றி வருகின்றன.

### அறிவோம் தெளிவோம்

**உஷா மேத்தாவின் சுதந்திரக் குரல் வானொலி நிலையம்**

1920 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 24 ஆம் நாள் குஜராத்



மாநிலத்தில் பிறந்தவர் உஷா மேத்தா. இவர், தமது 22 ஆம் வயதில் பாபுபாய் படேல் என்பவரின் உதவியுடன் 1942, ஆகஸ்ட் 14 அன்று ஒரு வானொலி நிலையத்தை உருவாக்கினார். தலைவர்களின் உரைகள், விடுதலைப் போராட்ட உத்திகள் போன்ற பல நிகழ்ச்சிகள் இதில் ஒலிபரப்பப்பட்டன. இந்நிலையத்தை ஒரே இடத்திலேயே தொடர்ச்சியாகச் செயல்படுத்த முடியவில்லை. பதினைந்து நாட்களுக்கு ஒருமுறை இடம்மாற்றப்பட்டது. மூன்று மாதங்கள் மட்டுமே இந்த வானொலி நிலையம் இயங்கியது.

வானொலியும் தன் பங்கிற்கென இலக்கிய நிகழ்ச்சிகளை ஒலிபரப்பி வருகின்றது. கவிதை, கதை, இலக்கிய விமர்சனம், சொற்பொழிவுகள் போன்ற நிகழ்ச்சிகள் வாரத்தின் குறிப்பிட்ட நாள்களிலும் விழாக்காலங்களின்போதும் ஒலிபரப்பப்படுகின்றன.

## திரைப்படம் தொடர்பான நிகழ்ச்சிகள்

தமிழ்நாட்டில் 1993ஆம் ஆண்டிற்கு முன்னர் தூர்தர்சன் என்ற ஒரே அரசுத் தொலைக்காட்சி நிறுவனம் மட்டுமே இருந்தது. இதில் வெள்ளிக்கிழமையில் இரவு நேரத்தில் ஒளியும் ஒலியும் என்ற தலைப்பில் திரைப்படப் பாடல்கள் ஒளிபரப்பப்படும். ஞாயிறு மாலையில் ஒரு தமிழ்த் திரைப்படம் ஒளிபரப்பாகும்.

தனியார் தொலைக்காட்சிகள் தொடங்கப்பட்டபிறகு திரைப்படம் பற்றியும் திரைப்பட நடிகர்கள் பற்றியும் பேசாத

தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் இல்லை என்றே சொல்லலாம். திரைப்பட விமர்சனம், திரைப்படத் துறையினருக்கு விருது வழங்கும் விழாக்கள், திரைப்படத் துறையினருடன் நேர்காணல் என எண்ணற்ற திரைப்படம் சார்ந்த நிகழ்ச்சிகள் தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்படுகின்றன. திரைப்படங்களைமட்டுமேஒளிபரப்புவதற்கெனத் தனியே தொலைக்காட்சி நிலையங்கள் தொடங்கப்பட்டுள்ளன.

வானொலியிலும் திரைப்படம் சார்ந்த நிகழ்ச்சிகள் ஒலிபரப்பப்படுகின்றன. திரையிசைப்பாடல்கள், திரைக்கதம்பம், திரைப்படத்தின் வசனத்தை ஒலிபரப்பும் ஒலிச்சித்திரம், திரைப்பட ஆளுமைகளின் பேட்டி முதலான நிகழ்ச்சிகள் வானொலியில் இடம்பெறுகின்றன.

## தொடர்கள்/ நாடகங்கள்

நெடுந்தொடர்கள் தொலைக்காட்சியின் முக்கிய பகுதியாக விளங்குகின்றன. கதாசிரியர்களின் சொந்த படைப்புகள், மகாபாரதம், இராமாயணம் முதலான இதிகாசங்களும் கந்தபுராணம், பெரியபுராணம், திருவிளையாடற்புராணம் போன்ற புராணக் கதைகளும் தொலைக்காட்சியில் நெடுந்தொடர்களாக ஒளிபரப்பப்படுகின்றன. நகைச்சுவை நாடகங்களும் விழிப்புணர்வு நாடகங்களும் குறிப்பிட்ட சில நாள்களில் தொடர்ந்து ஒளிபரப்பாகின்றன.

### அறிவோம் தெளிவோம்

**இலக்கு அளவீட்டுப் புள்ளி (TRP)**

(Target Rating Point) என்பது மொத்த பார்வையாளர்களுள் எத்தனை பார்வையாளர்கள் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைப் பார்க்கிறார்கள் என்பதன் மதிப்பீட்டளவாகும். ஒரு தொலைக்காட்சியில் ஒளிபரப்பாகும் ஒரு விளம்பரம் அல்லது தொடரினைப் பார்த்து ரசித்த இலக்கு பார்வையாளர்களின் மதிப்பீட்டுப் புள்ளிகளின் கூட்டுத்தொகை ஆகும். இதனை அளவிடும் கருவி "மக்கள் கருவி" என அழைக்கப்படும்.




வானொலியிலும் நாடகங்களுக்கு முக்கியத்துவம் வழங்கப்படுகிறது. தொடர் நாடகங்களும் குறுநாடகங்களும் ஒலிபரப்பப்பட்டு வருகின்றன. நாடகப் படைப்பாளர்களை ஊக்குவிக்க நாடகவிழாக்கள் நடத்தப்படுகின்றன.

## சிறுவர் நிகழ்ச்சிகள்

வானொலி, தொலைக்காட்சிகளில் சிறுவர்களை மகிழ்விக்கும் பல நிகழ்ச்சிகள் ஒலி-ஒளிபரப்பாகி வருகின்றன. இந்நிகழ்ச்சிகள் குழந்தைகளின் அறிவாற்றலை மேம்படுத்தும் வகையிலும் ஒழுக்க நெறியினைக் கற்பிக்கும் வகையிலும் தயாரிக்கப்பட்டு ஒளிபரப்பப்படுகின்றன.



இவற்றில் சிறுவர்களுக்கான நன்னெறிக் கதைகள், பொதுஅறிவு நிகழ்ச்சிகள், பொழுதுபோக்கு நிகழ்ச்சிகள் போன்றவை இடம்பெறுகின்றன. சிறுவர்களுக்கெனத் தனியான அலைவரிசைகள் தொடங்கப்பட்டு 24 மணி நேரமும் சிறுவர் நிகழ்ச்சிகளை ஒளிபரப்பி வருகின்றன.



12th ADVNCEl Tamil - Chap 5&6.indd 214 14-04-2020 18:51:53

## நேயர் கடிதங்கள்

நிகழ்ச்சிகள் பற்றிய நேயர்களின் கருத்துகளைத் தெரிந்துகொள்வதற்காக வானொலியில் 'நேயர் கடிதம்' என்ற நிகழ்ச்சியும் தொலைக்காட்சியில் 'எதிரொலி' என்ற நிகழ்ச்சியும் குறிப்பிட்ட கால இடைவெளியில் வழங்கப்படுகின்றன. இந்நிகழ்ச்சியில் நேயர்களின் மடல்கள் வாசிக்கப்பட்டு அவற்றிற்கான பதில்கள் முன்வைக்கப்படுகின்றன.

| மின்னணு ஊடகம் | நிகழ்ச்சி |
|---|---|
| GYAN DARSHAN | கல்வித் தொலைக்காட்சி |
| GYAN VANI | கல்வி வானொலி |
| DD News | செய்திகள் |
| NATIONAL GEOGRAPHIC CHANNEL | புவியியல் |
| ANIMAL PLANET | உயிரியல் |
| DD NATIONAL / STAR SPORTS | விளையாட்டு |
| TACTV | அரசு சேவை |
| NASA TELEVISION | அறிவியல் |
| Discovery life CHANNEL | உடல்நலம் |
| BBC Worldwide | உலகச்செய்திகள் |

### அறிவோம் தெளிவோம்

அலைக்கற்றை எஸ்.பாண்ட் (S–Band) அலைக்கற்றை என்பது 2 முதல் 5 கிகா கெட்சு வரை உள்ள ரேடியோ அலையளவைக் குறிப்பதாகும். இது அலைபேசித் தொலைத்தொடர்புக்கும், ராடார் இயக்கத்துக்கும், தரைவழித் தொலைத்தொடர்புக்கும் பயன்படுகிறது. இதில் 2.6 கிகா கெட்சு (2500–2690 கிகா கெர்ட்சு) என்றழைக்கப்படும் அலைநீளம் உலக வானொலி மன்றத்தால் 2000 ஆம் ஆண்டு தரைவழி அலைபேசி பயன்பாட்டிற்கு வழங்கப்பட்டுள்ளது.

## துறைசார் தொலைக்காட்சிகள்

ஒரே அலைவரிசையில் அனைத்து நிகழ்ச்சிகளையும் (Channel) ஒளிபரப்பிய நிலைமாறி ஒவ்வொரு துறைக்கும் தனித்தனியே அலைவரிசைகள் தொடங்கப்பட்டுள்ளன. செய்தி, விளையாட்டு, கல்வி, மருத்துவம், இசை, திரைப்படம், விளம்பரம், குழந்தைகளுக்கானவை, ஆன்மிகம், சூழலியல், பொழுதுபோக்கு, நகைச்சுவை போன்ற நிகழ்ச்சிகள் துறைசார் அலைவரிசைகளில் ஒளிபரப்பப்படுகின்றன. சில துறைசார் தொலைக்காட்சிகளும் அதில் ஒளிபரப்பாகும் நிகழ்ச்சிகளும் பின்வருமாறு:

## இணையமும் தகவல் தொடர்பும்

திறன்பேசியின் மூலம் ஒவ்வொரு தனிமனிதனும் தனது எண்ணங்களையும் தன்னைச் சுற்றி நடக்கும் நிகழ்வுகளையும் உடனுக்குடன் இணையத்தில் பதிவேற்றம் செய்யமுடியும். அதனை அடுத்த வினாடியே உலக மக்கள் அனைவரும் காணலாம். இதற்கென இணையத்தில் மின்னஞ்சல், வலைப்பூக்கள், முகநூல், கீச்சகம், புலனம் போன்றவை நமக்குப் பயன்படுகின்றன. இச்சமூக ஊடகங்கள் பிறர் மனத்தைப் புண்படுத்தும் எதிர்மறையான கருத்துகளையும் உண்மைக்குப் புறம்பான தகவல்களையும் பதிவிடவோ பகிர்ந்துகொள்ளவோ கூடாது. மத்திய அரசு, தகவல் தொழில்நுட்பத்துறை இவற்றைக் கண்காணிப்பதற்காகச் சில விதிமுறைகளை வகுத்துள்ளது.



12th ADVNCEl Tamil - Chap 5&6.indd 215 14-04-2020 18:51:54

# வானொலி மற்றும் தொலைக்காட்சி – உள்கட்டமைப்பு

**பன்னிரண்டாம் வகுப்பு மாணவி பாரதி, தொலைக்காட்சி நிலையத்தைப் பார்வையிட்டு வந்த அனுபவத்தை மின்னஞ்சல் மூலமாக அயல்நாட்டில் பணிபுரியும் தன் தந்தையிடம் பகிர்ந்து கொள்கிறாள்.**

*நாள்: 28.03.2019*

*இடம்: பூம்புகார்*

*அப்பா! அன்பும் வணக்கமும். எங்கள் பள்ளியின் சார்பாகச் சென்ற வாரம் தொலைக்காட்சி நிலையத்தைப் பார்வையிடச் சென்றிருந்தோம். அந்த அனுபவத்தைத் தங்களுடன் பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன்.*

*பனிவிலகும் அதிகாலை நேரம். வானுயர்ந்த ஒளிபரப்பு கோபுரம் பொருத்தப்பட்டிருந்த வளாகத்தை அடைந்தோம். 'இதுதான் நாம் காணவந்த தொலைக்காட்சி நிலையம்' என்றார் எங்கள் வகுப்பாசிரியர். இதுவரை வீட்டில் இருந்தபடியே செய்திகளையும் கலைநிகழ்ச்சிகளையும் தொலைக்காட்சியில் கண்டுகளித்த எங்களுக்குத் தொலைக்காட்சி நிலையத்தை நேரில் பார்ப்பது வியப்பாக இருந்தது. எங்கள் வருகைக்கு அனுமதியளித்திருந்த நிலைய இயக்குநரும் பணியாளர்களுள் சிலரும் நுழைவாயிலிலேயே காத்திருந்தனர். மாணவர்களாகிய எங்களை வரவேற்க நிலைய இயக்குநரே காத்திருந்த செயல் எங்களுக்கு மகிழ்ச்சியளித்தது.*



முதலாவதாக நிலையத்தின் கூட்ட அரங்கிற்குள் நுழைந்தோம். அங்கு எங்களுக்குத் தேநீர் வழங்கப்பட்டது. தேநீர் அருந்தும் நேரத்தில் நிலைய இயக்குநர், தொலைக்காட்சி நிலையத்தின் அமைப்பு, நிருவாகம் பற்றி எங்களுக்கு எடுத்துரைத்தார்.

ஆகாசவாணி என்னும் வானொலியும் தூர்தர்சன் என்னும் தொலைக்காட்சியும் மத்திய தகவல் மற்றும் ஒளி-ஒலிபரப்பு அமைச்சகத்தின் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கி வருவதாகத் தெரிவித்தார்.

தொடர்ந்து பேசிய இயக்குநர் தொலைக்காட்சி, வானொலி நிலையங்களின் உட்பிரிவுகள் பற்றி எங்களுக்கு விளக்கத் தொடங்கினார். ''தொலைக்காட்சி மற்றும் வானொலி நிலையங்களில் நிருவாகப் பிரிவு, நிகழ்ச்சிப் பிரிவு, எந்திரப் பிரிவு என மூன்று பிரிவுகள் உள்ளன. இம்மூன்று பிரிவுகளும் நிலைய இயக்குநரின் ஆளுகையின்கீழ் இயங்குகின்றன" என்றார்.

உடனே ஒரு மாணவன் ''வரவேற்புப் பலகையில் 'பிரசார் பாரதி' என்ற வாசகத்தைப் பார்த்தேன். அதற்கும் தொலைக்காட்சிக்கும் என்ன தொடர்பு?' என்ற வினாவை எழுப்பினான். அதற்கு அவர் ''1997-இல் இந்திய நடுவண் அரசால் நிறுவப்பட்ட அமைப்புதான் 'பிரசார் பாரதி' (PRASHAR BHARATI). வானொலியும் தொலைக்காட்சியும் இந்த அமைப்பின்கீழ்தான் இயங்கிவருகின்றன" என்று பதில் அளித்தார்.

அத்துடன் தொலைக்காட்சி நிலையத்தின் செயல்பாடுகள்பற்றி அறிய எங்களுக்கு உதவியாக நிலையத்தின் முதுநிலைப்பணியாளர் ஒருவரை ஏற்பாடு செய்திருந்தார். அவருடன் சேர்ந்து நிலையத்தைச் சுற்றிப்பார்க்கத் தொடங்கினோம். நிலைய அலுவலகத்திற்கு எங்களை அழைத்துச்சென்ற அவர் முதலில் நிருவாகப் பிரிவின் பணிகள் பற்றி எங்களுக்கு எடுத்துக்கூறினார்.

தொலைக்காட்சியும் வானொலியும் தடையின்றி இயங்க, நிருவாகப் பிரிவு திறம்பட செயல்படுதல் வேண்டும் என்றும் விளம்பரக் கட்டணங்கள் பெறுதல், பணியாளர்களுக்கு ஊதியம் வழங்குதல் முதலான பணிகள் இப்பிரிவில் மேற்கொள்ளப்படுவதாகக் கூறினார்.

நாம் நாள்தோறும் காணும் நிகழ்ச்சிகள் எவ்வாறு தயாரிக்கப்பட்டு ஒளிபரப்பப்படுகின்றன என்பதை அறிய, நிகழ்ச்சிப் பிரிவுக்குள் நுழைந்தோம். நிகழ்ச்சி அரங்கு, புதுப்பொலிவுடன் காணப்பட்டது. அரங்கின் மூன்று பக்கங்களிலும் நவீன படப்பிடிப்புக் கருவிகள் பொருத்தப்பட்டிருந்தன. அப்படப்பிடிப்புக் கருவிகள் கட்டுப்பாட்டு அறையுடன் இணைக்கப்பட்டிருந்தன. வண்ண விளக்குகளால் அவ்வரங்கு அலங்கரிக்கப்பட்டிருந்தது.

அங்கு கிராமிய நடனநிகழ்ச்சி ஒன்றை ஒளிப்பதிவு செய்துகொண்டிருந்தனர். நிகழ்ச்சியின் இடையிடையே நிகழ்ச்சி அரங்கையும், படப்பிடிப்புக் கருவிகளையும் சரிசெய்யுமாறு கட்டுப்பாட்டு அறையிலிருந்து ஒரு குரல் ஒலித்தது. நிகழ்ச்சித் தயாரிப்பாளரின் வழிகாட்டுதலின்படி பதிவு செய்யப்பட்ட இந்நிகழ்ச்சி பொங்கல் சிறப்பு ஒளிபரப்புக்கான ஒளிப்பதிவு என்பதை அறிந்தோம். நாம் தொலைக்காட்சியில் காணும் ஒவ்வொரு நிகழ்ச்சியின் உருவாக்கத்திலும் தயாரிப்பாளரின் பங்களிப்பு எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை அறிந்துகொண்டோம்.

''தொலைக்காட்சியின் அனைத்து நிகழ்ச்சிகளையும் தயாரித்து வழங்குவது தங்களுக்குக் கடினமாக இல்லையா?'' என்று அவரிடம் கேட்டோம். அதற்கு அவர் ''ஒவ்வொரு நிகழ்ச்சிக்கும் தனித்தனியே தயாரிப்பாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். அவர்கள் அந்நிகழ்ச்சிக்கு முழுப்பொறுப்பாளர்களாக இருப்பார்கள். எல்லா நிகழ்ச்சிகளுமே தொலைக்காட்சி நிலையத்தாரால் தயாரிக்கப்படுவதில்லை. நிகழ்ச்சிகளைத் தயாரிப்பதற்கெனத் தனியே சில நிறுவனங்களும் செயல்பட்டு வருகின்றன. நிகழ்ச்சித் தயாரிப்பாளர்கள் நிலைய இயக்குநரின் வழிகாட்டுதலின்படி செயல்படுவர்'' என்றும் அவர் தெரிவித்தார்.

மூன்றாவதாக எந்திரப் பிரிவுக்கு எங்களை அழைத்துச்சென்றார். அந்த அறையானது குளிரூட்டப்பட்டிருந்தது. அவ்வறையுடன் திறன்மிகுந்த ஒளிபரப்பு கோபுரம் இணைக்கப்பட்டிருந்தது. அறை முழுவதும் கணிப்பொறியுடன்கூடிய நவீன தொழில்நுட்ப எந்திரங்களும் ஒலி பெருக்கிகளும் நிறைந்திருந்தன. அதற்கு அடுத்து படத்தொகுப்பு அறைக்குச் சென்றோம். அங்குப் பொருத்தமற்ற காட்சிகளை நீக்கியும் குறிப்பிட்ட நேரத்திற்குள் முடிக்கும் வகையில் காட்சிகளைச் சுருக்கியும் இசை மற்றும் குரலைக் காட்சிகளுக்கு ஏற்றவாறு ஒட்டியும் ஒளி-ஒலி காட்சிகள் (Video Clippings) உருவாக்கப்படுவதை நேரில் கண்டோம். ஒளிப்பதிவு காட்சிகளைச் சிறப்பாக வடிவமைத்து வழங்குவதில் எந்திரப் பிரிவின் பணி முதன்மையானது என்பதைப் புரிந்துகொண்டோம்.

மதிய உணவு நேரம் வந்தது. முதுநிலை பணியாளருடன் மதிய உணவிற்காக அருகில் இருந்த உணவகத்திற்குச் சென்றோம். உணவகத்திலிருந்த தொலைக்காட்சியில் ஓர் அரசுப் பள்ளியின் ஆண்டுவிழா நேரலையாக ஒளிபரப்பாகிக்கொண்டிருந்தது. மாணவ மாணவிகள் நிகழ்ச்சிகளை மிகவும் சிறப்பாக வழங்கிக்கொண்டிருந்தனர். மதிய உணவை முடித்துவிட்டு மீண்டும் தொலைக்காட்சி நிலையத்திற்கு வந்துகொண்டிருந்தபோது சிற்றுந்து ஒன்று நிலையத்திற்குள் நுழைந்தது. சிற்றுந்தின் மேல் குடை வடிவில் ஒரு கருவியைப் பொருத்தியிருந்தார்கள். நிலையப் பணியாளரிடம் அச்சிற்றுந்தைப் பற்றிக் கேட்டபோது, அவர் நிலையத்திற்கு வெளியில் நடக்கும் நிகழ்ச்சிகளைப் பதிவுசெய்து ஒளிபரப்புவதற்கென மூன்று வகையான சிற்றுந்துகள் இயங்கி வருவதாகக் கூறினார்.

1. நடமாடும் ஒளி-ஒலிப்பதிவுக் கூடம் (Mobile Studio)

   நிலையத்திற்கு வெளியே நடக்கும் நிகழ்ச்சிகளைப் பதிவுசெய்து, தொலைக்காட்சி நிலையத்திலிருந்து ஒளிபரப்பும் சிற்றுந்துகளையே 'நடமாடும் ஒளிபரப்புகூடம்' என்று அழைக்கிறோம்.

2. வெளிப்புற ஒலி-ஒளிபரப்பு வாகனம் (OB-Van-Outdoor Broadcasting Van)

   இவ்வகை வாகனங்கள் நிகழ்ச்சி நடைபெறும் இடத்திலிருந்தே நிகழ்ச்சிகளை நேரலையாக ஒளிபரப்புகின்றன.



3. மின்னணு செய்தி சேகரிப்பு வாகனம் (ENG Van-Electronic News Gathering Van)

   24 மணி நேரமும் செய்திகளை ஒளிபரப்பி வரும் தொலைக்காட்சி நிலையங்களில் இவ்வகையான வாகனங்கள் இயங்கி வருகின்றன. இவ்வாகனங்கள் தொலைக்காட்சி நிலையத்தில் உள்ள அனைத்து வசதிகளையும் கொண்டதாக அமைந்திருக்கும்.

என மூன்று வகையான வாகனங்கள் பற்றி எடுத்துக்கூறினார்.

அதன்பின்பே உணவகத்தில் கண்ட ஆண்டுவிழாவின் நேரடி நிகழ்ச்சி எவ்வாறு ஒளிபரப்பப்படுகிறது என்பது எங்களுக்குத் தெளிவாகப் புரிந்தது. தொடர்ந்து பேசியபடியே நிலைய இயக்குநரின் அறைக்குள் சென்றோம்.

நிகழ்ச்சித் தயாரிப்பு மற்றும் ஒளிபரப்பு பற்றித் தெரிந்துகொண்ட எங்களுக்கு இத்துறையில் உள்ள வேலைவாய்ப்பு பற்றித் தெரிந்துகொள்ள ஆவல் ஏற்பட்டது. எங்கள் ஆவலைப்புரிந்து கொண்ட நிலைய இயக்குநர் "ஊடகவியல் சார்ந்த இளங்கலை, முதுகலை மற்றும் சான்றிதழ் படிப்புகள் இருக்கின்றன என்றும் இப்பாடங்களைக் கற்பிக்கும் கல்லூரிகள் பற்றியும் விளக்கினார். ஊடகத்தில் பணிபுரிய

விருப்பம் உள்ளவர்கள் விடாமுயற்சியும் தன்னம்பிக்கையும் உள்ளவர்களாக இருத்தல் வேண்டும். செய்திகளை நுட்பமாக வெளிப்படுத்தும் ஆற்றல் பெற்றவர்களாக இருத்தல் வேண்டும். நற்சிந்தனை கொண்டவராகவும் சமூக முன்னேற்றத்தில் நாட்டம் உள்ளவராகவும் இருத்தல் வேண்டும். இப்பண்புகளே ஊடகத்தில் பணிபுரிவதற்கான அடிப்படைத் தகுதிகளாகும்." என்றார். உடனே நான்," ஆமாம் ஐயா! பதினோராம் வகுப்பு பாடப்புத்தகத்தில்கூட ஊடகவியல் தொடர்பான படிப்புகளை எங்கு கற்கலாம் என ஒரு பட்டியலே கொடுத்துள்ளனர்" என்றேன். அவர் என்னைப் பாராட்டினார்.

பின்னர் நிகழ்ச்சிகளை வடிவமைப்பதில் "தொலைக்காட்சிக்கும் வானொலிக்கும் ஏதேனும் வேறுபாடு உள்ளதா?" என்று அவரிடம் வினவினோம்.

## தொலைக்காட்சி–வானொலி நிகழ்ச்சிகள்

"வானொலி நிகழ்ச்சிகளைச் செவிவழியாக மட்டுமே கேட்டு உணரமுடியும் என்பதால் வானொலி நிகழ்ச்சிகளைத் தயாரிக்கும்போது சொற்களைக்கவனமாகப்பயன்படுத்தவேண்டும். வானொலி மூலம் செய்திகளைக் கேட்பவர்களுக்குப் பொருள் மயக்கம் ஏற்படாதவாறு சொற்களைத் தெளிவாகவும் சுருக்கமாகவும் கூறுதல் வேண்டும். நெடுந் தொடர்களையும் கடினமான சொற்களையும் தவிர்த்து, செய்திகளின் உணர்ச்சிக்கேற்றவாறு குரல் ஏற்ற இறக்கத்துடன் பேச அல்லது வாசிக்க வேண்டும்.

வானொலிக்காக எழுதித் தயாரிக்கப்படும் கதைகளிலும் நாடகங்களிலும் குறைந்த எண்ணிக்கையிலான கதாபாத்திரங்கள் இடம்பெறுதல் வேண்டும். மெய்ப்பாடுகள், சூழல், கதாபாத்திரங்கள், உயர்திணை அஃறிணைப் பொருள்கள் முதலானவற்றின் வெளிப்பாடுகளைச் சொற்களின் மூலமாகவும் ஒலியின் மூலமாகவும் வெளிப்படுத்தும் வகையில் நிகழ்ச்சிகள் எழுதப்பட வேண்டும்.

வானொலி நிகழ்ச்சிகளுக்கு எழுதுவதை விட தொலைக்காட்சி நிகழ்ச்சிகளுக்கு எழுதுவது எளிதான செயலாகும். தொலைக்காட்சியில் காட்சிகளின் மூலம் கதாபாத்திரங்கள், சூழல், மெய்ப்பாடுகள் முதலானவற்றை வெளிப்படுத்த முடியும். இதில் எழுத்துக்கலையைவிட நடிப்புக்கலை முதன்மை இடத்தைப் பெறுகின்றது. எனவே, கதைக்கேற்ற நடிகர்களைத் தேர்வு செய்வது நிகழ்ச்சித் தயாரிப்பாளரின் கடமையாகும். தொலைக்காட்சி நாடகங்கள், தொடர்கள் முதலியவை எழுத்தாளர்களின் சொந்த படைப்பாகவும் புராணக் கதைகளாகவும் புதினங்களாகவும் அமையும்." என்று அவர் சொல்லி முடித்தார்.

அடுத்து செய்தி அறைக்குச் சென்று செய்தி வாசிப்பாளரைச் சந்தித்தோம். அவர் தொலைக்காட்சி, வானொலியில் செய்தி வாசிப்பிற்கான தயாரிப்புகள், உத்திகள் பற்றிச் சில தகவல்களை எங்களிடம் பகிர்ந்துகொண்டார்.

## செய்தி வாசிப்பிற்கான நெறிமுறைகள்

தொலைக்காட்சியில் செய்தி வாசிப்பவர்கள் நேரான பார்வையில் வாசித்தல் வேண்டும். தேவையற்ற உடல் அசைவு கூடாது. செய்தி வாசிப்பாளரின் ஒப்பனை நேயர்களின் கவனச்சிதறலுக்கு இடம்தராமல் இருத்தல் வேண்டும். செய்திவாசித்தல் நேரடி ஒளிபரப்பு ஆகையால் செய்தியை முன்னரே வாசித்துப்பார்த்தல் அவசியமாகும். குரலில் தடுமாற்றம், நடுக்கம் இருத்தல் கூடாது.




இவையெல்லாம் செய்தி வாசிப்பாளருக்கான பொதுப்பண்புகளாகக்

கருதப்படும். வளர்ந்துவரும் தொலைக்காட்சித் தொழில்நுட்பத்தின்மூலம் நிகழ்வுகளைத் திரையில் ஓடவிட்டு செய்திகளை விளக்கிக்கூறுவதாகவும் இருவர் உரையாடுவதாகவும் இசைப்பாடலாகவும் புதுப்புது வடிவங்களில் செய்திகள் வாசிக்கப்படுகின்றன.

வானொலியில் செய்தி வாசிப்பவர்களுக்குக் குரல்வளம் இன்றியமையாதது. சிறந்த மொழி ஆளுமை கொண்டவராகவும் உணர்வுகளைச் சொற்களில் வெளிப்படுத்தும் திறன் கொண்டவராகவும் இருத்தல் வேண்டும் என்று வானொலி, தொலைக்காட்சி செய்தி வாசிப்பைப் பற்றிக் கூறியவர், செய்திகள் எவ்வாறு இருத்தல் வேண்டும் என்பது பற்றியும் விளக்கினார்.

## செய்திகளின் தன்மைகள்

மக்கள் அறியாத நிகழ்வுகள், அரசின் அறிவிப்புகள், இயற்கைச் சீற்றங்கள், புதிய கண்டுபிடிப்புகள், சாதனைகள், அரசியல், நீதிமன்ற நடவடிக்கைகள், விளையாட்டு, வானிலை, வாணிகம் சார்ந்த நிகழ்வுகள் போன்றவை செய்தியாக்கப்படவேண்டும். செய்திகள் உண்மைத்தன்மை உடையனவாக இருத்தல் அவசியம்.

தேவையற்ற சொற்கள், கற்பனைகள், சுயகருத்துகள், விமர்சனங்கள் இடம் பெறுதல் கூடாது. நடுநிலையோடு செய்திகள் இருத்தல் வேண்டும். எளிய நடையில் மக்களுக்குப் புரியும் சொற்களில் அமைதல் நலம். நெடிய தொடராக இல்லாமல், சிறுசிறு தொடராகச் செய்தியை எழுதுதல் வேண்டும். பிறநாட்டுச் செய்திகளை மொழிபெயர்க்கும் பொழுது பொருள் மாறாமல் மொழிபெயர்த்தல் வேண்டும் என்றார்.

அவர் கூறிய தகவல்கள் அனைத்தும் எங்களுக்கு மிகவும் பயனுள்ளவையாக இருந்தன. அவருக்கு நன்றி சொல்லி விடைபெற்றோம். அப்பொழுது கடிகாரம் மாலை ஐந்து மணியைக் காட்டியது.

நிலையத்தில் கலை நிகழ்ச்சி ஒளிபரப்பாகிக் கொண்டிருந்தது. நிகழ்ச்சியினைத் தொகுப்பாளர் தொகுத்து வழங்கிக்கொண்டிருந்தார். நிகழ்ச்சி முடிந்தவுடன் அவரைச் சந்தித்து எங்களது பாராட்டுகளைத் தெரிவித்துக்கொண்டோம். "உங்களால் எப்படி இவ்வளவு அழகாக நிகழ்ச்சியை நடத்த முடிகிறது?" என்று கேட்டோம். அப்போது அவர் நிகழ்ச்சித் தொகுப்பிலுள்ள உத்திகள் பற்றி எங்களிடம் பகிர்ந்துகொண்டார்.

## நிகழ்ச்சித் தொகுப்பாளரின் பண்புகள்

நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்குவதற்கு மொழியாளுமை இன்றியமையாதது. பார்வையாளர்களை மகிழ்விக்கும் வகையில் நகைச்சுவை கலந்து பேசுதல் வேண்டும். பார்வையாளர்கள் புத்துணர்ச்சியினைப் பெறும் வகையில் தொகுப்புரை உயிரோட்டமாக அமைதல் வேண்டும். நிகழ்ச்சியில் பங்கேற்பவர்களின் பின்புலம், சிறப்புகள் பற்றி ஆங்காங்கே குறிப்பிடுதல் நிகழ்ச்சியை மேலும் சிறப்பாக்க உதவும். நிகழ்ச்சியில் திடீரென மாற்றங்கள் ஏற்படும்போது அதனைப் பதற்றமில்லாமல் கையாளும் திறன் தொகுப்பாளருக்கு இருக்க வேண்டும். இப்படிப்பட்ட திறமைகளை வளர்த்துக்கொண்டால் உங்களாலும் நிகழ்ச்சிகளைச் சிறப்பாகத் தொகுத்து வழங்க முடியும் என்று புத்துணர்வோடு அவர் பேசிய வார்த்தைகளைக் கேட்டபோது எங்களுக்குள் தொகுப்பாளர்களாக வேண்டும் என்ற ஆவல் மிகுந்தது. தொகுப்பாளர் அவரது பணி முடிந்து எங்களிடமிருந்து விடைபெற்றார்.

## விளம்பரங்களின் தன்மைகள்

பின்பு விளம்பர நிகழ்ச்சிகள் பற்றி இயக்குநரிடம் கேட்டோம். அதற்கு அவர், வானொலியிலும் தொலைக்காட்சியிலும் நிகழ்ச்சிகளுக்கிடையே விளம்பரங்கள் இடம்பெறுகின்றன. பொருள்களை விற்பனை செய்யும் நிறுவனங்கள் அதிக அளவில் தோன்றியுள்ளன. அவற்றிற்கிடையே உள்ள போட்டியின் காரணமாக விற்பனையை அதிகரிக்கும்பொருட்டு புதிய உத்திகளோடு விளம்பரங்கள் தயாரிக்கப்பட்டு வானொலியிலும் தொலைக்காட்சியிலும் ஒளி பரப்பப்படுகின்றன. ஒவ்வொரு நிறுவனமும் இதற்கெனப் பெருந்தொகையினைச்



செலவிடுகிறது. தொலைக்காட்சி, வானொலி ஆகிய ஊடகங்களில் அரசு நலத்திட்டங்களும் ஒளிபரப்பாகின்றன என்று விளம்பர ஒளிபரப்பு பற்றி எடுத்துக்கூறினார்.

அப்பொழுது தொலைக்காட்சியில் திரைப்பட நடிகர் ஒருவரின் நேர்காணல் ஒளிபரப்பாகிக்கொண்டிருந்தது. "நேர்காணல் நிகழ்ச்சிகள் எவ்வாறு நடத்தப்படுகின்றன?" என்று இயக்குநரிடம் கேட்டோம். முகமலர்ச்சியோடு அவர் எங்களிடம் நேர்காணல் பற்றிய செய்திகளைப் பகிர்ந்துகொண்டார்.

## தொலைக்காட்சி நேர்காணல்

"நேர்காணல் என்பது வினா கேட்பவர், விடை தருபவர், நேயர்கள் என மூவரை மையப்படுத்திய நிகழ்ச்சியாகும். நேர்காணல் நிகழ்த்துபவர், தாம் வெற்றிபெறவேண்டும் என்ற நோக்கில் வினாக்களைக் கேட்கக் கூடாது. நேயர்களின் நிலையில் இருந்து வினாக்களைக் கேட்க வேண்டும். நேர்காணல் தருபவர் நேயர்களைக் கருத்தில் கொண்டு தெளிவான விளக்கத்தினை விடையாகத் தருதல் வேண்டும். இப்படிப்பட்ட நேர்காணலே உண்மை நிலையை வெளிப்படுத்துவதாக அமையும்.

இத்தகைய நேர்காணலானது பல்வேறு சூழல்களில் நிகழ்கிறது. பேட்டி எடுப்பவர் தற்செயலாய் தலைவர் ஒருவரை சந்திக்க நேர்ந்தால் அவரிடம் ஓரிரு மணித்துளி மட்டும் நிகழ்த்தப்படும் நேர்காணல் ஒருவகை. இது விமான நிலையங்களிலும் வழிப்பயணங்களின் போதும் நடைபெறும். அண்மைச் செய்திகள் குறித்து மக்களுக்கு அறிமுகமான ஆளுமை ஒருவரிடம் கருத்துக் கேட்பதாக அமைவது மற்றொரு வகை நேர்காணல். இது ஐந்து நிமிடத்திற்குள் முடிந்துவிடும். குறிப்பிட்ட ஒரு துறை சார்ந்த வல்லுநர்களிடம் திட்டமிட்டு நடத்தப்படும் நேர்காணல் நெடுநேர நேர்காணலாக நடைபெறும். சமுதாயத்தில் நடைபெறும் சீர்கேடுகளை மையப்படுத்தி ஒன்றுக்கும் மேற்பட்டவர்களிடம் விவாத நிகழ்ச்சியாக நடைபெறும் நேர்காணலும் உண்டு. இவ்வகை நேர்காணலை நடத்துபவர் 'நெறியாளர்' என்று அழைக்கப்படுவார். இந்நேர்காணல்கள் பெரும்பாலும் செய்தித் தொலைக்காட்சிகளில் நடத்தப்படுகின்றன" என நேர்காணலைப் பற்றி இயக்குநர் விளக்கமாக எடுத்துக்கூறினார்.

வானொலி,தொலைக்காட்சிநிலையங்களின் அமைப்பு மற்றும் நிகழ்ச்சி ஒளிபரப்புபற்றி அறிந்துகொண்ட மனநிறைவோடு நிலைய இயக்குநர் மற்றும் நிலையத்தில் பணிபுரியும் பணியாளர்கள் அனைவருக்கும் எங்களின் நன்றியினைத் தெரிவித்துக்கொண்டு வீடு திரும்பினோம்.

அன்றைய நாள் எங்களுக்கு மிகவும் மகிழ்வான நாளாக அமைந்தது. அறிவைத் தேடிப் பயணிக்கும் ஒவ்வொரு நாளும் மகிழ்வானதுதான்.

பகிர்வின் மகிழ்வில்
அன்பு மகள்
பாரதி



12th ADVNCEl Tamil - Chap 5&6.indd 221 14-04-2020 18:51:54

# ஊடகவியல் சட்டங்கள்
## (உரையாடல்)

(பங்கேற்பாளர்கள்: சலீம், கலைமதி, கயல்விழி, ஆசிரியர்)

(வயல்வெளியின் வரப்புப் பாதையொன்றில், கலைமதி தலையணி ஒலிவாங்கியில் பாட்டுகேட்டவாறு நடந்துசெல்கிறாள். எதிரே அவளது பள்ளித் தோழன் சலீம் வருகிறான்)



காட்சி – 1

*சலீம்:* என்ன கலை, தலையணி ஒலிவாங்கியில் (Head Phone) பாட்டுக் கேட்டுக்கொண்டே எங்கே செல்கிறாய்?

*கலைமதி:* (காதிலிருந்து ஒலிவாங்கியை எடுத்துவிட்டு) சொல்லு சலீம். நல்லா இருக்கியா? விடுமுறை என்பதால் வயலைச் சுற்றிப் பார்க்கலாம் என்று செல்கிறேன். நீயும் வருகிறாயா?

*சலீம்:* வருகிறேன் கலை. எங்கப்பாவும் வயலில்தான் இருக்கிறார். அவருக்குச் சாப்பாடு கொண்டுசெல்ல வேண்டும். வா! சேர்ந்தே செல்வோம்.

*கலைமதி:* (மீண்டும் ஒலிவாங்கியைக் காதில் பொருத்திக்கொண்டு) அப்பப்பா... எத்தனை பண்பலை... எத்தனை நிகழ்ச்சிகள்... கேட்டுக்கொண்டே இருக்கலாம்போல இருக்கு சலீம்.

*சலீம்:* ஆமாம்... ஆமாம்... திரையிசை மட்டுமின்றி நாட்டு நடப்புகள், கல்வி, வணிகம், மருத்துவம், சமையல், அரசியல், விளையாட்டு, வானிலை என எத்தனை எத்தனை நிகழ்ச்சிகள்!

(எதிரே அவர்களின் வகுப்புத் தோழி கயல்வழி வருகிறாள்)

*கயல்விழி:* என்ன கலை! சலீம்! நான் வந்ததுகூடத் தெரியாமல் அப்படி எதைப் பற்றிப் பேசிக்கிட்டிருக்கீங்க?

*கலைமதி:* வா கயல் ! நாங்கள் வானொலி நிகழ்ச்சிகளைப் பற்றிப் பேசிக்கிட்டிருந்தோம்.

*கயல்விழி:* நீங்க ஏதாவது நிகழ்ச்சி தயாரித்து வானொலியில் ஒலிபரப்பப்போறீங்களா என்ன?

*சலீம்:* நாம் தயாரித்துக் கொடுக்கும் நிகழ்ச்சிகளைக்கூட ஒலிபரப்புவாங்களா?

கயல்விழி: ஊடகச் சட்டவிதிகளுக்கு உட்பட்டு நல்ல நிகழ்ச்சியாக இருந்தால் ஒலிபரப்புவாங்க.

கலைமதி: இதற்கெல்லாம் சட்ட விதிகள் உண்டா? இதெல்லாம் உனக்கு எப்படித் தெரியும்?

கயல்விழி: உண்டு. எங்க மாமா தொலைக்காட்சி நிலையமொன்றில் வேலை பார்க்கிறார். அவர் சொல்லித்தான் இதெல்லாம் எனக்குத் தெரியும்.

(எதிரில் அவர்களின் பள்ளி ஆசிரியர் வருகிறார்)

சலீம்: கலை! அதோ பார் நம் தமிழ் ஐயா வருகிறார்.

(மூவரும் வணக்கம் சொல்கின்றனர்)

ஆசிரியர்: வணக்கம் பிள்ளைகளா! நீங்க இங்க என்ன செய்றீங்க? வகுப்பில் கொடுத்த செயல்திட்டங்களை முடித்துவிட்டீர்களா?

கலைமதி: ஐயா நம் வகுப்பில் இயற்கை வேளாண்மை மற்றும் சுற்றுச்சூழல் குறித்த செயல்திட்டங்களையே அனைவரும் செய்கின்றனர். ஆகவே நாங்கள் வேறு ஏதாவதொரு புதிய தலைப்பைத் தேடிக்கொண்டிருக்கிறோம்.

சலீம் : ஐயா! எனக்கு ஒரு சந்தேகம்.

ஆசிரியர் : சொல்லு சலீம்!

சலீம்: ஊடகங்களுக்கெனச் சட்டவிதிகள் உள்ளன என்று கயல் கூறினாள். உண்மையாகவே அப்படிப்பட்ட சட்டங்கள் உள்ளனவா ?

கலைமதி: எனக்கும் இதே சந்தேகம்தான் ஐயா...

ஆசிரியர்: நீங்கள் இருவரும் சரியான கேள்வியைத்தான் கேட்டுள்ளீர்கள். ஊடகத்திற்கென்று சட்டங்களும், விதிகளும் உண்டு.

சலீம்: அப்படியென்றால் அவற்றைப் பற்றி எங்களுக்குக் கூறுங்கள் ஐயா, தெரிந்துகொள்ள ஆவலாக உள்ளோம்.

ஆசிரியர்: ஊடகவியல் சட்டங்கள் பற்றி எனக்கும் முழுமையாகத் தெரியாது.

சலீம்: இத்தகவல்களை வேறு எப்படி அறிவது?

ஆசிரியர்: நம் நகரில் உள்ள அரசு கலைக் கல்லூரியில் ஊடகப்பிரிவு மாணவர்களுக்கான கருத்தரங்கம் நாளை நடைபெறுகிறது. அதில் ஊடகவியல் வல்லுநர்கள் பலர் கலந்துகொள்கின்றனர். என்னையும் அழைத்திருக்கிறார்கள். நீங்கள் மூவரும் என்னுடன் வாருங்கள். அங்கே உங்களுக்குத் தேவையான தகவல்களையும் ஐயங்களையும் கேட்டுத் தெரிந்துகொள்ளலாம்.

கலைமதி: புதுமையான ஒரு செயல்திட்டம் என்ன செய்வதென்று தவித்த எங்களுக்கு இது நல்லதொரு வாய்ப்பு.நாளை எங்கள் பெற்றோரின் அனுமதியுடன் கட்டாயம் கலந்துகொள்கிறோம். நன்றி ஐயா.

ஆசிரியர்: நல்லது, சென்று வாருங்கள் நாளை பார்க்கலாம்.

### காட்சி – 2

**இடம் : கல்லூரி வளாகம்**

(சலீம், கலைமதி, கயல்விழி ஆகிய மூவரும் கல்லூரி வளாகத்தில் ஆசிரியரைச் சந்தித்து வணங்குகின்றனர்)

ஆசிரியர் : வணக்கம். வாருங்கள் பிள்ளைகளா! உங்களைத்தாம் எதிர்பார்த்துக் காத்திருந்தேன்.

சலீம்: இன்று நாம் யாரைச் சந்திக்கப் போகிறோம் ஐயா?


ஆசிரியர்: என் நண்பர் திரு. அறிவழகன் அவர்களை இன்று நாம் சந்திக்கப்போகிறோம். அவர் பெருநிறுவன வழக்குரைஞரும் கூட.

கயல்விழி: பெருநிறுவன வழக்குரைஞரா அப்படியென்றால்..!

ஆசிரியர்: குடும்பநலம், மருத்துவம், குற்றம் போன்றவற்றிற்கு உள்ளதைப்போல் நிறுவனங்களுக்குச் சட்ட ஆலோசனை வழங்கும் சிறப்பு வழக்குரைஞரைத்தான் அப்படி அழைப்போம்.



12th ADVNCEl Tamil - Chap 5&6.indd 223 14-04-2020 18:51:55



கலைமதி: வழக்குரைஞர்களில் இத்தனை வகையினரா?

ஆசிரியர்: ஆம் கலைமதி. வழக்குரைஞர்கள் அனைவரும் பொதுவான சட்டங்களை அறிந்திருந்தாலும் அவற்றிற்கென உள்ள சிறப்பு வழக்குரைஞர்களிடம் நாம் மேலும் தெளிவாக அறிந்துகொள்ளலாம். சரி வாருங்கள் அவரைச் சந்திப்போம்.

(விழா மேடையின் அருகில் அமர்ந்திருக்கும் வழக்குரைஞர் திரு. அறிவழகனிடம் செல்கின்றனர்)

ஆசிரியர்: ஐயா வணக்கம்.

அறிவழகன்: வாருங்கள் ஐயா! யார் இந்த பிள்ளைகள்? உங்கள் பள்ளி மாணவர்களா?

ஆசிரியர்: ஆமாம் ஐயா! இவர்கள் ஊடகச் சட்டங்கள், விதிகள் ஆகியன பற்றி அறியவேண்டும் என்ற ஆவலால் இங்கு வந்துள்ளார்கள்.

அறிவழகன்: அடடே! இந்தச் சின்ன வயதிலேயே உங்களுக்கு ஊடகவியலில் உள்ள ஆர்வத்தைக் காணும்போது மிகவும் மகிழ்ச்சியாக உள்ளது. கண்டிப்பாக ஊடகவியல் துறையில் நீங்கள் சிறந்த ஆளுமைகளாக வருவீர்கள். வாருங்கள் குழந்தைகளே உங்களுக்கு என்னிடம் என்ன தெரிந்துகொள்ள வேண்டும்?

கலைமதி: ஐயா! நாளிதழ், வானொலி, தொலைக்காட்சி, திரைப்படம், இணையம் போன்ற ஊடகங்களுக்கு உள்ள சுதந்திரம் மற்றும் கட்டுப்பாடுகள் பற்றி அறிந்துகொள்ள ஆவலாக உள்ளோம்.

அறிவழகன்: மிக்க மகிழ்ச்சி எல்லோரும் நாற்காலியில் அமருங்கள் கூறுகிறேன். நீங்கள் கூறிய அனைத்து ஊடகங்களுக்கும் செய்திகளை வெளியிடுவதில் முழுச் சுதந்திரம் உள்ளது. ஆனால், அது தனிமனிதனையோ ஒரு சமுதாயத்தையோ நாட்டையோ ஒரு நிறுவனத்தையோ நேர்மையற்ற முறையில் பாதிப்பதாக இருத்தல் கூடாது. மீறினால் அந்த ஊடகத்தைத் தடை செய்யவும் தண்டிக்கவும் சட்டங்கள் உள்ளன.

சலீம்: என்னென்ன சட்டங்கள் உள்ளன என்று கூறுங்கள் ஐயா.

அறிவழகன்: ஊடகங்களுக்கென்று தனியாகப் பல சட்டங்கள் உள்ளன. அவற்றுள் உங்களுக்குத்

தேவையான சில சட்டங்களைப் பற்றி மட்டும் கூறுகிறேன். கேளுங்கள்.

1. தனிநபர் அவமதிப்புச் சட்டம்
2. நாடாளுமன்ற நடவடிக்கைகள் சட்டம்.
3. நீதிமன்ற அவமதிப்புச் சட்டம்
4. அலுவலக இரகசியங்கள் சட்டம்
5. பத்திரிகை, புத்தகங்கள் பதிவுச் சட்டம்.
6. ஆபாச வெளியீட்டுத் தடைச்சட்டம்.
7. காப்புரிமைச் சட்டம்.
8. இளைஞர்களைக் கெடுக்கும் வெளியீடுகள் தடைச் சட்டம்.
9. பணிசெய் இதழாளர் சட்டம்.

கலைமதி: தனிநபர் அவமதிப்புச் சட்டத்தைப் பற்றிக் கொஞ்சம் சொல்லுங்கள் ஐயா!

அறிவழகன்: ஒருவரை அவமதிக்கும் நோக்கத்தோடு பேசுவதோ, எழுதுவதோ சைகைகள் மற்றும் குறியீடுகளால் வெளிப்படுத்துவதோ அவமதிப்புக் குற்றத்தின் கீழ் வரும். இந்தியக் குற்றவியல் சட்டம் 499 ஆம் பிரிவு அவமதிப்பு மற்றும் விதிவிலக்குகள் பற்றியும் 500 ஆம் பிரிவு தண்டனைகள் பற்றியும் விளக்குகிறது.

சலீம்: அவமதிப்பில் விதிவிலக்குகள் உண்டா?

அறிவழகன்: ஆம் சலீம். பொதுநலன் கருதி உண்மையை வெளியிடாமல் இருத்தல், நல்ல எண்ணத்தோடு நீதிமன்ற நடவடிக்கைகளை வெளியிடல், பொது நலனையோ தனி மனிதர்களையோ காப்பதற்காக அதிகாரத்தில் உள்ளவர்களையோ, பிறரையோ குறை கூறுதல், பொதுநலன் கருதி எச்சரித்தல் போன்றவை அவமதிப்புக் குற்றமாகா.

கயல்விழி: அவமதிப்புக் குற்றத்திற்கான தண்டனைகள் என்னவென்று கூறுங்கள் ஐயா.

அறிவழகன்: 1973–ஆம் ஆண்டின் வழக்குத்தொடர் விதிப்படி 199(1) அவமதிப்புக்கு உள்ளானவர்கள் மட்டுமே நீதிமன்றத்தில் வழக்கு தொடர முடியும். ஆனால், குடியரசுத் தலைவர், குடியரசுத் துணைத் தலைவர், மாநில ஆளுநர், மத்திய மாநில அமைச்சர்கள் ஆகியோர் அவமதிப்புக்கு ஆளானால் அவர்கள் சார்பில் அரசு வழக்குரைஞர் வழக்கு தொடுக்கலாம்.

அவ்வாறு வழக்கு தொடுக்கும்பட்சத்தில் இந்தியக்குற்றவியல் சட்டம் 500 ஆம் பிரிவின்படி இரண்டாண்டுகள்வரை சிறைத் தண்டனை, அபராதம் அல்லது இரண்டும் வழங்கப்படலாம். பொதுச் சட்டத்தின்படி மானஇழப்பு வழக்கு தொடுப்பவர்கள் இழப்பீடும் பெற முடியும்.

கலைமதி: நாடாளுமன்ற நடவடிக்கைகள் சட்டம் என்பது நாடாளுமன்றத்தின் நடவடிக்கைகளை வெளியிடுவதற்கான சட்டம்தானே, ஐயா?

அறிவழகன்: சரியாகச் சொன்னாய் கலைமதி. நாடாளுமன்ற நடவடிக்கைகளை உள்ளபடி வெளியிடுவது ஊடகங்களின் கடமையாகும். 1956 ஆம் ஆண்டு நாடாளுமன்ற நடவடிக்கைகள் சட்டத்தின்படி நாடாளுமன்ற நடவடிக்கைகள் தீய நோக்கில் வெளியிடப்பட்டன என உறுதி செய்யப்பட்டால் தண்டனை வழங்கலாம்.

கலைமதி: நாடாளுமன்ற அவமதிப்புச் சட்டம் குறித்துத் தெளிவாகக் கூறினீர்கள், ஐயா. ஊடகத்தில் நீதிமன்ற அவமதிப்புச் சட்டம் என்று கூறினீர்களே, அதைப் பற்றி விரிவாகக் கூறுங்களேன்.

அறிவழகன்: நீதிமன்றங்கள் அவற்றின் வழக்குகள் பற்றிய செய்திகளை வெளியிடுவதில் மிகுந்த கவனம் வேண்டும். தீர்ப்பு வருவதற்கு முன்பாகவே குற்றவாளி என்று ஊடகத்தில் குறிப்பிடக்கூடாது. தீர்ப்பு இதுவாகத்தான் இருக்கும் என்ற கணிப்பையும் தெரிவித்தல் கூடாது. நீதிமன்ற சட்டத்தையோ, தீர்ப்புகளையோ, நீதிபதிகளையோ அவதூறு செய்வதுபோல் வெளியிடுதல் கூடாது.

கயல்விழி: அப்படி நீதிமன்றத்தைக் குறித்துத் தவறாக ஊடகத்தில் செய்திகளைப் பரப்பினால், அதற்கு ஏதேனும் தண்டனைகள் உண்டா? இச்சட்டம் எப்பொழுது நிறைவேற்றப்பட்டது எனக் கூறுங்கள் ஐயா!.



12th ADVNCEl Tamil - Chap 5&6.indd 225 14-04-2020 18:51:56

அறிவழகன்: கட்டாயம் தண்டனை உண்டு. 1952 ஆம் ஆண்டு நீதிமன்ற அவமதிப்புச் சட்டத்தின்படி குற்றங்கள் உரிமையியல், குற்றவியல் என இரண்டு வகைகளாகப் பிரிக்கப்பட்டன. நீதிமன்ற ஆணைகளுக்கும் தீர்ப்புகளுக்கும் கட்டுப்பட மறுப்பது உரிமையியல் வழக்காகவும் ஊடகங்களில் தவறான செய்திகளைப் பரப்புவது குற்றவியல் வழக்காகவும் பதிவு செய்யப்படும். குற்றம் உறுதிசெய்யப்பட்டால் ஆறுமாதம் சிறைத்தண்டனையோ, அபராதமோ விதிக்கப்படும்.

கலைமதி: அப்பப்பா.... ஊடகத்தில் பணியாற்றுபவர்கள் மிகக் கவனமாகத்தான் ஒவ்வொரு நிகழ்ச்சியையும் வெளியிட வேண்டும் போல் இருக்கிறதே. ஆமாம் ஐயா, அலுவலக இரகசியச் சட்டம் என்றீர்களே. அப்படி என்றால் ஊடக அலுவலகத்தைப் பற்றிய ரகசியத்தை வெளியில் கூறக் கூடாதா?

அறிவழகன்: அப்படி இல்லை. அரசு அலுவலகச் செயல்பாடுகளில் ரகசியமாக வைக்கப்படவேண்டிய சில தகவல்களை வெளியிடுவது சட்டப்படி குற்றமாகும்.

கயல்விழி: ரகசியமாக வைக்கப்பட வேண்டிய தகவல்கள் எவை என்று கூற முடியுமா? ஐயா!.

அறிவழகன்: ஊடகமானது நிகழ்வுகளை மக்களுக்கு வெளிப்படையாகக் காட்டும் கண்ணாடி என்ற நோக்கில் எல்லாவற்றையும் வெளியிடுதல் கூடாது. நாட்டின் பாதுகாப்பு, வெளிநாட்டுத் தொடர்பு, குற்றப் புலனாய்வு, அமைச்சரவை முடிவு போன்றவற்றை ரகசியமாக அறிந்து அவற்றை வெளியிடுவது பெருங்குற்றமாகும். இதைத் தடைசெய்ய 1923 ஆம் ஆண்டில் அலுவலக இரகசியங்கள் சட்டம் கொண்டுவரப்பட்டது.

சலீம்: இப்பொழுது புரிகிறது ஐயா, எல்லாவற்றையும் மக்களுக்கு ஊடகம் வெளிப்படையாகக் காட்டுதல் கூடாது என்பதை புரிந்துகொண்டோம். பாதுகாப்பு ரகசியங்களை எல்லாம் வெளியிட்டால் நாடு என்னாவது? சிலர் சில செய்தியை வெளிப்படுத்தும் பொழுதே ரகசிய தகவல்கள் வெளியாகி உள்ளன என்றெல்லாம் கூறுவார்களே. அவை தவறுதானே ஐயா!



**உங்களுக்குத் தெரியுமா?**

**அனைத்திந்திய வானொலி (All India Radio) சேவைகள்**
**தமிழ்நாடு பண்பலை**

| எண் | நிலையம் | அதிர்வெண் (மெகாஹெர்ட்ஸ்–MHz) |
|---|---|---|
| 1 | சென்னை | 101.4 (ஏஐஆர் எப்எம் ரெயின்போ), 102.3 (ஏஐஆர் எப்எம் கோல்டு) |
| 2 | கோயம்புத்தூர் | 103 |
| 3 | தர்மபுரி | 102.5 |
| 4 | காரைக்கால் | 100.3 |
| 5 | கொடைக்கானல் | 100.5 |
| 6 | மதுரை | 103.3 |
| 7 | நாகர்கோவில் | 101 |
| 8 | உதகமண்டலம் | 101.8 |
| 9 | பாண்டிச்சேரி | 102.8 |
| 10 | தஞ்சாவூர் | 101.2 |
| 11 | திருச்சிராப்பள்ளி | 102.1 |
| 12 | ஏற்காடு (சேலம்) | 103.7 |



12th ADVNCEl Tamil - Chap 5&6.indd 226 14-04-2020 18:51:56

ஆசிரியர்: முற்றிலும் தவறு. செய்திக்கு உரியவர், தாம் நேரடியாகத் தராத செய்திகளைச் சித்திரித்து ஒளிபரப்பினால் மக்களாகிய நாம் அப்படியே நம்புதல் கூடாது. அந்தச் செய்தியைப் புறக்கணிப்பது நன்று.

அறிவழகன்: மிகவும் சரியாகச் சொன்னீர்கள் ஐயா. ஊடகங்கள் வதந்திகளைப் பரப்பக் கூடாது. அதை மக்களாகிய நாமும் ஆதரிக்கக் கூடாது.

சலீம்: நன்றாகப் புரிந்துகொண்டோம் ஐயா! இனி, நாங்கள் ஆதாரமற்ற செய்திகளை நம்பமாட்டோம். ஆபாச வெளியீட்டுத் தடைச்சட்டம் என்ற ஒன்றை முன்பு கூறினீர்கள் அல்லவா? அச்சட்டத்தைப் பற்றிக் கூறுங்கள் ஐயா!

அறிவழகன்: இந்தியக் குற்றவியல் சட்டத்தில் (IPC) 292, 293, 294 முதலான பிரிவுகள் எவை எவை ஆபாசம் எனப் பட்டியலிட்டுக் காட்டுகின்றன. அவற்றின் அடிப்படையில் நாகரிகமற்ற வார்த்தைகள், தரக்குறைவான சொல்லாடல்கள், அரைகுறை ஆடை ஓவியங்கள், அவ்வாறான புகைப்படங்கள், பாலினத்தை இழிவுபடுத்தும் கருத்துகள் மற்றும் படங்கள், பாலுணர்வைத் தூண்டும் நிகழ்ச்சிகள், இளைஞர்களின் மனத்தைத் திசை திருப்பும் நிகழ்ச்சிகள் போன்றவற்றை வெளியிடுதல் முற்றிலும் தவறாகும். மீறி வெளியிடும் ஊடக நிறுவனத்தின் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கவும், சிறைத் தண்டனையும் அபராதமும் விதிக்கவும் சட்டத்தில் இடம் உண்டு.

ஆசிரியர்: இப்பொழுது புரிகிறதா மாணவர்களே! ஆபாச வெளியீடு ஊடகத்தில் வந்தால், நீங்கள்கூடத் தடைச் சட்டத்தை வலியுறுத்தி ஊடகத்தின் மீது வழக்குத் தொடுக்கலாம். இன்னும் வேறு ஏதேனும் சந்தேகம் இருந்தால் கேட்டுத்தெரிந்துகொள்ளுங்கள்.

சலீம்: ஐயா! இளைஞர்களைத் தவறாக வழிநடத்தும் நிகழ்ச்சிகள் எவை? அவற்றிற்கான தடைச்சட்டம் குறித்துக் கூறுங்கள்

அறிவழகன்: 1956 இல் இளைஞர்களைக் கெடுக்கும் வெளியீடுகள் தடைச்சட்டம் அரசால் நிறைவேற்றப்பட்டது. இச்சட்டத்தின்படி, குற்றங்களைத் தூண்டுகின்ற நிகழ்ச்சி, வன்முறையைத் தூண்டும் நிகழ்ச்சி, அச்சத்தை ஏற்படுத்தும் நிகழ்ச்சி, இளைஞர்களைக் கெடுக்கும் விளம்பர நிகழ்ச்சி முதலானவற்றையெல்லாம் ஒளிபரப்ப தடைசெய்யப்பட்டுள்ளது. இச்சட்டத்தை மீறி செய்திகளை வெளியிடுவது தண்டனைக்குரிய குற்றமாகும்.

கயல்விழி: "காப்புரிமைச் சட்டம்" பற்றி கூறுங்கள் ஐயா.

அறிவழகன்: காப்புரிமைச் சட்டத்தின் படி. தம் சொந்த படைப்பிற்கு மட்டுமே ஒருவர் காப்புரிமை பெறமுடியும். அவ்வாறு காப்புரிமை பெறப்பட்ட ஒரு படைப்பை அவரின் அனுமதியின்றி வேறு எவரும் பயன்படுத்த இயலாது.

ஆசிரியர்: மிக்க நன்றி ஐயா! கருத்தரங்கம் தொடங்க இருக்கிறது. வாருங்கள் நாம் அனைவரும் அரங்கத்திற்குள் செல்வோம்.

**அறிவோம் தெளிவோம்**

**பிபிசி தமிழோசை**
**(BBC – British Broadcasting Corporation)**

BBC RADIO

இரண்டாம் உலகப்போர் நடைபெற்றபோது பிரிட்டன், இந்திய மொழிகளில் தன் வானொலி ஒலிபரப்பைத் தொடங்கியது. அதன் விளைவாக பிபிசி–இல், தமிழ் ஒலிபரப்பு 1941 ஆம் ஆண்டு மே திங்கள் 3– ஆம் நாள் தொடங்கப்பட்டது. அந்நிகழ்ச்சிக்குத் தொடக்கத்தில் 'செய்தி மடல்' எனப் பெயரிட்டிருந்தார்கள். 1948–இல் இந்நிகழ்ச்சிக்கு 'தமிழோசை' என சிவபாத சுந்தரம் பெயரிட்டார். தொடக்கத்தில் வாரம் ஒருநாள் ஒலிபரப்பாகிக்கொண்டிருந்த பிபிசி தமிழோசையின் நிகழ்ச்சிகள் 80களின் தொடக்கத்தில் வாரம் ஐந்து முறை என விரிவுபடுத்தப்பட்டது. 80களின் இறுதியில் வாரத்தின் அனைத்து நாள்களிலும் தனது ஒலிபரப்பைத் தொடங்கியது. வெளிநாட்டுச் சேவையான பிபிசி, 'வோர்ல்ட் சர்வீஸ்' என்ற பெயரில் 33 மொழிகளில் ஒலிபரப்புகின்றது. இதில் தமிழும் அடங்கும். உலகத் தமிழர்கள் இங்கிலாந்திலிருந்து வரும் தமிழோசை நிகழ்ச்சியைத் தங்கள் மொழிக்குக் கிடைத்த பெருமையாகவே கருதும் நிலை ஏற்பட்டுள்ளது.



12th ADVNCEl Tamil - Chap 5&6.indd 227 14-04-2020 18:51:56

# மின்னணு ஊடக ஆளுமைகள்

## தென்கச்சி கோ. சுவாமிநாதன்
## (இன்று ஒரு தகவல் – நன்னெறிக் கதைகள்)



அரியலூர் மாவட்டம் தென்கச்சி பெருமாள்நத்தம் என்னும் கிராமத்தில் பிறந்தவர் கோ.சுவாமிநாதன். இவர் தொடக்கக் கல்வியைச் சொந்த ஊரிலும், கல்லூரிக் கல்வியைக் கும்பகோணத்திலும் வேளாண் கல்வியைக் கோயம்புத்தூரிலும் பயின்றார்.

வானொலியில் 'இன்று ஒரு தகவல்' என்ற நிகழ்ச்சியின் மூலம் நன்னெறிக் கதைகளை நகைச்சுவையுடன் கூறி மக்களை மகிழ்வித்தவர் தென்கச்சி கோ. சுவாமிநாதன். வானொலியில் இவரது பேச்சைக் கேட்பதற்காகவே பெருமளவிலான மக்கள் காத்திருந்தனர்.

இவர் தமிழ்நாடு அரசுப் பணியில் விவசாய அலுவலராகப் பணியில் சேர்ந்தார். சிறிதுகாலத்திற்குப் பிறகு திருநெல்வேலி வானொலியில் பண்ணை இல்லப் பிரிவில் அறிவிப்பாளராகப் பணியேற்றார். அதன்பிறகு, சென்னை அகில இந்திய வானொலி நிலையத்தில் வேளாண் பிரிவு இயக்குநராக இருந்தபோது 'வீடும் வயலும்' என்னும் நிகழ்ச்சியை இவரே தொகுத்து வழங்கினார்.

தொலைக்காட்சியில் 'இந்த நாள் இனிய நாள்' என்ற நிகழ்ச்சியின் மூலம் மக்களுக்கு நீதிநெறிகளை வழங்கிவந்தார். தமிழ்நாடு அரசு இவருக்குக் கலைமாமணி விருது வழங்கிச் சிறப்பித்துள்ளது.

இவரது கதைகள் மக்களைப் புதிய நோக்கில் சிந்திக்கத் தூண்டின. இக்கதைகள், மக்களை மூடநம்பிக்கைகளிலிருந்து விடுவித்து, அவர்களிடம் மனிதநேயச் சிந்தனைகளை விதைப்பனவாக அமைந்திருந்தன.

இவருடைய முகத்தைப்பார்க்காதவானொலி நேயர்களும் இவருடைய குரலைக் கேட்டவுடன் 'தென்கச்சியார் பேசுகிறார்' என்று சொல்லும் அளவிற்கு அனைவர் மனத்திலும் தம் குரலைப் பதிவு செய்தவர். இவர் கதை சொல்லும்போது அடுத்து என்ன சொல்லப்போகிறார் என்ற எதிர்பார்ப்பு ஒவ்வொருவர் மனத்திலும் தொக்கி நிற்கும். அவர் கூறும் நன்னெறிக் கதையின் முடிவில் ஒரு நகைச்சுவையினையும் கூறி முடிப்பார். அவர் சிரிக்காமல் சொல்லும் நகைச்சுவைகள் மற்றவர்களைச் சிரிக்கவும் சிந்திக்கவும் வைத்தன.

**தென்கச்சியார் நடையில் கதை சொல்லிப் பழகுவோம்.**

கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணன், நகைச்சுவை அடுத்தவங்களுக்குத் துன்பம் குடுக்காம இருக்கணும். அடுத்தவங்க மனசைப் புண்படுத்தப்படாது. அதுதான் சிறந்த நகைச்சுவைங்கிறார். அதுக்கு அவர் ஒரு உதாரணமும் கொடுக்கிறார்.

ஓர் ஏரி ஓரமா ரெண்டு பையன்கள் நடந்து போய்க்கிட்டிருக்காங்க. அதுல ஒருத்தன் பணக்காரவீட்டுப் பையன். இன்னொருத்தன் ஏழை. இவங்க ரெண்டு பேரும் போய்க்கிட்டிருக்காங்க....

வழியில ஓர் இடத்துலே ஒரு சோடி செருப்பு இவங்க கண்ணுலே பட்டுது.

ஒரு விவசாயி அந்தச் செருப்பை அங்கே விட்டுட்டுப் பக்கத்துலே இருந்த ஏரியிலே கை– கால்

கழுவிக்கிட்டிருந்தார்.

உடனே அந்தப் பணக்காரப் பையனுக்கு ஒரு யோசனை!

அவன் சொன்னான்.

டேய்! இப்ப ஒரு வேடிக்கை செய்யலாம்... அந்தச் செருப்பு இரண்டையும் தூக்கி எட்டத்துலே வீசி எறிஞ்சிடுவோம். அந்த ஆளு வந்து பார்த்துட்டுச் செருப்பைத் தேடி அல்லாடுவான்... அங்கேயும் இங்கேயும் ஓடுவான். திருதிருவென முழிப்பான். அதை நாம இரசிக்கலாம். நல்லா தமாசா இருக்கும்! அப்படின்னான்.

இப்படிச் சொல்லிப்புட்டு அந்தச் செருப்புகளைத் தூக்கப் போனான். "கொஞ்சம் பொறு" ன்னான் அந்த ஏழைப் பையன்.

ஏன்? ன்னு கேட்டான் இவன். இப்ப அந்த ஏழைப்பையன் சொன்னான்...

நீ சொல்றது ஒண்ணும் வேடிக்கை இல்லே. உன்னோட செருப்புத் தெலைஞ்சா உன் அப்பா உடனே உனக்கு வேறே செருப்பு வாங்கிக்கொடுத்துடுவார்! ஆனா அந்த ஆளுக்கு இந்தச் செருப்பு தொலைஞ்சா வேறே புதுசா வாங்குறதுக்கு வாயையும் வயத்தையும் கட்டிப் பணத்தைச் சேர்க்கவேண்டியிருக்கும்!

அதனால நான் ஒரு வேடிக்கை சொல்றேன். அது மாதிரி செய்! அது இன்னும் தமாசா இருக்கும்.. அப்படின்னான்.

சரி! சொல்லுன்னான் இவன்.

"செருப்பு இரண்டும் அது இருக்கிற இடத்துலேயே இருக்கட்டும். உன் சட்டைப் பையிலேயிருந்து ஒரே ஒரு ரூபாய் நாணயத்தை எடுத்து அந்தச் செருப்பு மேலே அதோட குதிப் பகுதியிலே வை. வச்சுட்டு நாம ரெண்டு பேரும் அந்த மரத்துக்குப் பின்னாடி மறைஞ்சி நின்னுக்குவோம்." அப்புறம் பார் வேடிக்கையைன்னான்.

அதே மாதிரி ஒரு ரூபாய் காசை செருப்பு மேலே வச்சிட்டு இவங்க மறைஞ்சு நின்னுக்கிட்டாங்க. கொஞ்ச நேரத்துல அந்த விவசாயி வந்தார்.

கால்லே உள்ள மண்ணைத் தட்டிப்புட்டுச் செருப்பை மாட்டறதுக்குப் போனார். அங்கே இருந்த காசு கண்ணுல பட்டுது! அவருக்கு ஆச்சிரியமா போச்சு. அதை கையிலே எடுத்துப் பார்க்கிறார். நாலுபக்கமும் திரும்பி திரும்பிப் பார்க்கிறார். கடைசியிலே ஆகாயத்தைப் பார்க்கிறார்.

ஆண்டவா! இது உன்னோட கருணைதான்... நீதான் யாரோ புண்ணியவான் மனசுல தருமம் பண்ணற எண்ணத்த உண்டாக்கியிருக்க! அந்தப் புண்ணியவான் நல்லாயிருக்கனும்! ன்னு வாழ்த்தி அந்தக் காசைக் கண்ணுல ஒத்திக்கிட்டார்.

மறைஞ்சிருந்து பார்த்திட்டிருந்த ஏழைப் பையன் இப்பச் சொன்னான்...

பார்த்தியா...? உன்னைப் புண்ணியவான்னு வாழ்த்திட்டுப் போறார் அந்த ஆள்! அவருக்கும் சந்தோசம். உனக்கும் சந்தோசம். உனக்கு ஒரு ரூபாய்ங்கறது பெரிசில்ல. அதனால நமக்குக் கிடைச்சிருக்கிற மகிழ்ச்சி ரொம்ப உயர்வானது! அப்படின்னான்.

வேடிக்கையும் கிண்டலும் இது மாதிரி அடுத்தவங்களுக்கு இடைஞ்சலா இல்லாம இருக்கனும் என்கிறார் கலைவாணர்.

ஆனா பாருங்க.. அவருக்கே இடைஞ்சலா வர்ற விசயங்களைக் கூட அவரு வேடிக்கையாத்தான் எடுத்துக்கறார்.

ஒரு தடவை ஒருத்தர் கலைவாணர்க்கிட்டே வந்து...

ஐயா... என் குழந்தை செத்துப் போச்சு! ன்னு சொல்லி அழுதார். உடனே இவரு அவருக்கு நூறு ரூபாய் பணம் கொடுத்து "இந்தாங்க... அடக்கம் செய்யுங்கன்னு சொல்லி அனுப்பிவைச்சார்.

ஒரு வருசம் கழிச்சு மறுபடியும் அதே ஆள் வந்தார். இவறு மறந்திருப்பார்ங்கற நினைப்பிலே " அண்ணே... என் குழந்தை இறந்து போச்சண்ணே! ன்னார் இவரு மறுபடியும் நூறு ரூபாய் கொடுத்து ஆறுதல் சொல்லி அனுப்பினார்.

ஏழெட்டு மாசம் கழிச்சு மறுபடியும் அதே ஆள் வந்தார். அவரு வாயைத் திறக்கறதுக்க முன்னாடியே இவரு நூறு ரூபாயை அவரு கையில வெச்சு

"போன ரெண்டு தடவைதான் குழந்தை செத்துப்போச்சு" இந்தத் தடவையாவது சாகாமக் காப்பாத்திடுங்க! ன்னார்.

அதுக்கப்பறம் அந்த ஆள் வர்றதே இல்லையாம்.

## ர. அய்யாசாமி

## வானொலி அண்ணா

## (சிறுவர் நிகழ்ச்சி – பாலராமாயணம்)

வானொலி அண்ணா என்று அழைக்கப்பட்டவர் ர. அய்யாசாமி. இவர் கோயம்புத்தூர் மாவட்டம் பொள்ளாச்சிக்கு அருகில் உள்ள கல்லாபுரம் என்னும் ஊரில் பிறந்தவர். இளம் வயதிலேயே பாடல் எழுதும் ஆற்றல் பெற்று விளங்கினார். தொடக்கக் கல்வியினை உள்ளூரிலும் பள்ளி இறுதிக் கல்வியினை சென்னை இராமகிருஷ்ணா மடத்திலும் பயின்றார். சென்னை மாநிலக் கல்லூரியிலும் லயோலா கல்லூரியிலும் பட்டப் படிப்பினை முடித்தார்.

கல்லூரிப் படிப்பிற்குப் பிறகு 'தமிழ்நாடு' நாளிதழில் உதவி ஆசிரியராகப் பணியாற்றினார். 1944ஆம் ஆண்டு திருச்சி வானொலி நிலையத்தில் பணியேற்றார். இவர் சிறுவர்களுக்கான 'பாப்பா மலர்' மற்றும் 'முத்துக்குவியல்' நிகழ்ச்சியின் மூலம் மக்கள் மனத்தில் இடம்பிடித்தார். இந்நிகழ்ச்சி தொடர்ந்து பன்னிரண்டு ஆண்டுகள் ஒலிபரப்பாயிற்று.

கவிமணி தேசிக விநாயகனார் "ராமாயணக்கதையினைத் தமிழகத்துச் சிறுவர் சிறுமியர் விரும்பிப் படிக்கும் வண்ணம் இனிய எளிய நடையில் ஒரு தொடர்நிலைச் செய்யுளாகப் பாடுமாறு நான் தமிழ்க் கவிஞர்களைக் கேட்டுக்கொள்கிறேன்." என்றார். கவிமணியின் கனவை நிறைவேற்றும்



வகையில் இவர் பாலராமாயணம் இயற்றினார். இதனை இசைவடிவில் சிறுவர்கள் மற்றும் இளைஞர்களுக்கு வானொலியின் மூலம் கொண்டு சேர்த்தார். இதற்கு இசைக்கலைஞர் மல்லிக் இசையமைத்துள்ளார். எளிமை, இனிமை, பக்திமை, தனிமனித ஒழுக்கம் என பன்முக நோக்கில் கேட்பவர் உள்ளத்திற்கு இன்பம் தரும் காவியமாகப் பாலராமாயணம் திகழ்ந்தது. இவ்வொலிபரப்பிற்கு முப்பதாயிரம் பாராட்டுக்கடிதங்கள் வந்து குவிந்தன.

இவர் சென்னை வானொலியில் பாலராமாயணத்துடன் மோகன காந்தி என்னும் நிகழ்ச்சியையும் வழங்கி வானொலிக்குப் பெருமை சேர்த்தார். இவரது நிகழ்ச்சிகள் ஞாயிற்றுக்கிழமைகளில் சிறப்பு நிகழ்ச்சிகளாக ஒலிபரப்பப்பட்டன. இவர் தமிழில் மட்டுமன்றி விஜயவாடாவில் தெலுங்கிலும் கோழிக்கோட்டில் மலையாளத்திலும் சிறுவர்களுக்கான நிகழ்ச்சிகளை வழங்கியுள்ளார்.

**அறிவோம் தெளிவோம்** — **செயற்கைக்கோளும் மின்னணு ஊடகங்களும்**




ஒலி-ஒளி அலைகள் எப்போதும் நேர்க்கோட்டில் செல்லும் தன்மைகொண்டவை. பூமியானது கோளவடிவில் இருப்பதால் வானொலி மற்றும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைத் தொலைதூரத்திற்குப் பரப்புவது மிகவும் கடினமான ஒன்றாக இருந்தது. இச்சூழலில் செயற்கைக்கோள்கள் கண்டுபிடிக்கப்பட்டு விண்ணில் செலுத்தப்பட்டன. அதன் பயனாக இன்று உலகெங்கும் நடக்கும் நிகழ்வுகளை எளிதாக வானொலி, தொலைக்காட்சி ஆகியவற்றின் வழியாக நாம் கண்டும் கேட்டும் மகிழ்கிறோம்.

## வெ. நல்லதம்பி

## (மக்கள் தொடர்பு–எதிரொலி)

சென்னைத் தொலைக்காட்சியின் 'எதிரொலி' நிகழ்ச்சி மூலம் புகழ்பெற்று 'எதிரொலி நல்லதம்பி' என்று அழைக்கப்படுபவர் முனைவர் வெ.நல்லதம்பி. இவர் பள்ளிப் படிப்பை மணப்பாறையிலும், பட்டப் படிப்பினை சென்னைப் பச்சையப்பன் கல்லூரியிலும் முடித்தார். சென்னைப் பல்கலைக் கழகத்தில் முனைவர் பட்டம் பெற்றார்.



1963 முதல் 1965 வரை திருநெல்வேலியிலும் திருச்சியிலும் அகில இந்திய வானொலி நிலையங்களில் நிகழ்ச்சி அறிவிப்பாளராகப் பணிபுரிந்தார். பிறகு வாசிங்டனில் உள்ள 'வாயஸ் ஆப் அமெரிக்கா' வானொலி நிலையத்தில் அறிவிப்பாளராகவும் மொழிபெயர்ப்பாளராகவும் பணியாற்றினார். அதன் பிறகு சென்னைத் தொலைக்காட்சி நிலையத் தயாரிப்பாளராகவும் நிலைய உதவி இயக்குநராகவும் பணியாற்றினார்.

இவர் சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவக சிந்தாமணி ஆகியவற்றை நாடக வடிவில் எழுதி வெளியிட்டுள்ளார். இவரது சிலப்பதிகார நாடக நூல் 'நூபுர் க ஸ்வர்' என்ற பெயரில் இந்தியில் மொழிபெயர்க்கப்பட்டுப் புதுதில்லி வானொலியில் ஒலிபரப்பானது குறிப்பிடத்தக்கது.

'டெலிவிஷன்' என்னும் ஆங்கிலச் சொல்லுக்கு இணையான தமிழ்க் கலைச்சொல்லை உருவாக்க முயன்றபோது பலரும் பல சொற்களை உருவாக்கியளித்தனர். இருப்பினும் இவர் முன்மொழிந்த 'தொலைக்காட்சி' என்றசொல்லேஅனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டு இன்றும் பயன்பாட்டில் உள்ளது.

தொலைக்காட்சியிலும் வானொலியிலும் செய்தி வாசிப்பவர்களுக்கும் நிகழ்ச்சி அறிவிப்பாளர்களுக்கும் தமிழ் மொழியினை உச்சரிப்புப்பிழையின்றிப் பேச இவர் பயிற்சியளித்துள்ளார்.

இரண்டாவது, ஐந்தாவது உலகத் தமிழ் மாநாடுகளில் பிற நாட்டுத் தமிழறிஞர்களிடம் நேர்காணல் நிகழ்த்தி அதனைப் படத்துடன் ஆவணப்படுத்தியுள்ளார்.

இவர் ஓய்வுக்குப் பின் தமிழக அரசு பள்ளிக் கல்வித் துறையில் ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்ககத்தில் உள்ள கல்வித் தொலைக்காட்சிப் படப்பதிவு நிலையத்தில் சிறப்பு அலுவலராக இரண்டு ஆண்டுகள் பணியாற்றியுள்ளார். மேலும், இவரது கல்விப் பணியினைப் பாராட்டி 'மால்கம் ஆதிசேஷய்யா' என்னும் விருது வழங்கியுள்ளனர்.

## முத்துக்கூத்தன்

## (கிராமியக்கலை – பொம்மலாட்டம்)

பாவைக்கூத்து என்றும் பொம்மலாட்டம் என்றும் சொல்லப்படும் கையுறை பொம்மலாட்டம் இன்று உலகம் முழுவதும் பல்வேறு வடிவங்களில் பரவியுள்ளது. இந்நிகழ்ச்சிகள் விழாக்காலங்களில் கிராமங்களில் மக்களைக் களிப்பூட்டுவதற்காக நடத்தப்பட்டன. குழந்தைகள் முதல் முதியவர்கள் வரை விரும்பிப் பார்க்கும் நிகழ்ச்சியாகப் பொம்மலாட்டம் விளங்கியது.





12th ADVNCEI Tamil - Chap 5&6.indd 231 14-04-2020 18:51:57

**அறிவோம் தெளிவோம்**

## முத்துக்கூத்தனின் மதுவிலக்குப் பொம்மலாட்டம்.

### தொட்டான்– கெட்டான்

தந்தை, மகனை வெட்ட கையில் அரிவாளுடன் நிற்பார். தாய்... எதற்காக இவ்வளவு கோபம் எனக் கேட்பார். கடை வீதியில் யாரோ ஒருத்தனோடு குடித்துவிட்டுத் தள்ளாடியபடி உன் புள்ள போறான்னு பக்கத்துவீட்டுக்காரர் சொல்றாரு. அப்படிப்பட்ட குடிகார மகன் இந்த வீட்டுக்குள்ள வரக்கூடாது. என் மானம் மரியாதையெல்லாம் போச்சு என்று பதறுவார்.

அந்த நேரம் மகன் வந்து வாசலில் நிற்பான். "வீட்டுக்குள்ள நுழையாதே... அப்படியே போய்விடு. உள்ளே வந்தா வெட்டுவேன்' என்பார் தந்தை. ஏன் இவ்வளவு கோபம்!' என்று புரியாமல் மகன் கேட்பான். இவர் தாம் கேட்ட தகவலைச் சொல்லுவார்.

நான் குடிக்கல உங்க நண்பர் குடிச்சிட்டுப் பை நிறைய பணத்துடன் விழுந்து கிடந்தார். அதைப் பார்த்த நான் அவரை வீட்டிற்கு அழைத்துச்சென்றேன். அவர் போதையில் ஆடி அசைந்து சென்றபோது அவரைப் பிடித்திருந்த நானும் அப்படிச் செல்லவேண்டியதாகி விட்டது.

"குடிகாரனைத் தொட்டதற்கே இப்படி கெட்ட பெயர் வந்துடுச்சே! குடியைத் தொட்டா எவ்வளவு கெட்ட பெயர் வந்து சேரும்" என்று மகன் கூறுவான்.

தன் தவற்றை உணர்ந்த தந்தை, மகனைக் கட்டி அணைத்துக்கொள்வார்.

*தமிழில் பொம்மலாட்டக் கலைக்குப் பெருமை சேர்த்தவர் முத்துக்கூத்தன். இவர் திருச்சியை அடுத்த பொய்யாமணி என்னும் கிராமத்தில் பிறந்தவர். திருச்சியில் 9 ஆம் வகுப்புவரை படித்தார். இவர் சென்னைக்கு வந்த பிறகு நகைச்சுவை நடிகராகவும், மேடைப் பாடகராகவும், பாடலாசிரியராகவும் தம்மை மேம்படுத்திக்கொண்டார். தன் மகன் கலைவாணனுடன் சேர்ந்து பொம்மலாட்டக் கலையில் ஈடுபட்டார்.*

*சென்னைத் தொலைக்காட்சியில் 'கண்மணிப்பூங்கா' என்னும் நிகழ்ச்சியில் முத்துக்கூத்தனின் பொம்மலாட்டம் இடம்பெற்றது. இந்நிகழ்ச்சியில் சுற்றுச்சூழல், சுகாதாரம், கல்வி, குடும்ப நலம், இயற்கை வேளாண்மை, தமிழ்ப் பண்பாடு, தமிழ் இலக்கியம் போன்றவற்றை உள்ளடக்கிய விழிப்புணர்வுக் கதைகள் பொம்மலாட்டங்களில் நிகழ்த்தப்பட்டன.*

*கிராம மக்களுக்குப் பயன்படும் கல்வி, உடல்நலம், தனிமனித ஒழுக்கம் போன்றவற்றை வலியுறுத்தும் நிகழ்ச்சிகளை இவர் நடத்தினார். இதன் மூலம் சென்னைத் தொலைக்காட்சியில் பொம்மலாட்ட நிகழ்ச்சிக்கு மக்களிடையே பெரும் வரவேற்பு கிடைத்தது.*

*சென்னைத் தொலைக்கட்சியில் அண்ணல் காந்தியடிகளின் பிறந்த நாளன்று மதுவிலக்கு பற்றிய விழிப்புணர்வு பொம்மலாட்டத்தை நிகழ்த்தியது குறிப்பிடத்தக்கது.*

### துகிலி. சுப்பிரமணியம்
### (வேளாண்மை – பண்ணை இல்லம்)

*துகிலி. சுப்பிரமணியம் வானொலியில் பண்ணை இல்லம் நிகழ்ச்சியின் மூலம் அறிமுகமானவர். இவர் தஞ்சாவூர் மாவட்டம் துகிலி என்னும் கிராமத்தில் உள்ள ஒரு நெசவாளர் குடும்பத்தில் பிறந்தவர். இவர் விவசாயத்தைத் தம் உயிரெனக் கருதி அவற்றின் வளரச்சிக்காகப் பாடுபட்டார். தமிழக அரசின் ஊரக வளர்ச்சித் துறையில் கிராம நல அலுவலராகப் பணியாற்றினார். இவர் பண்ணை இல்லம் நிகழ்ச்சியில் ஒவ்வொரு நாளும் ஒரு புதிய செய்தியினைக் கூறி விவசாயிகளைத் தம்பால் ஈர்த்தார். இவரது நிகழ்ச்சிகள் விவசாயம் செய்யாத மக்களையும்*



12th ADVNCEl Tamil - Chap 5&6.indd 232 14-04-2020 18:51:57

## அறிவோம் தெளிவோம்

### ஊடகங்களில் உள்ள பணிகள்

| அச்சு ஊடகம் | மின்னணு ஊடகம் |
|---|---|
| முதன்மை ஆசிரியர் | ஆசிரியர் |
| உதவி ஆசிரியர்கள் | உதவி ஆசிரியர்கள் |
| நிருபர்கள் | நிருபர்கள் |
| சிறப்புச் செய்தியாளர்கள் | புகைப்படக் கலைஞர்கள் |
| பத்தி எழுத்தாளர்கள் | ஒளி- ஒலிப்பதிவாளர்கள் |
| கருத்துப்படம் உருவாக்குபவர் | தொழில்நுட்பக் கலைஞர்கள் |
| புகைப்படக் கலைஞர் | செய்தி வாசிப்பாளர் |
| பிழை திருத்துநர் | இணையத்தில் பக்கவடிவமைப்பாளர் |
| வரைகலை வடிவமைப்பாளர் | அரங்கு அமைப்பாளர் |
| பக்க வடிவமைப்பாளர் | நிகழ்ச்சித் தயாரிப்பாளர்கள் |
| | ரேடியோ ஜாக்கி |
| | வீடியோ ஜாக்கி |
| | டிஸ்க் ஜாக்கி |

கேட்கத் தூண்டும் வகையில் கலைநயத்துடன் அமைந்திருந்தன.

பாமர மக்களிடமும் எளிமையான முறையில் நேர்காணல் நிகழ்த்தி நுட்பமான தகவல்களைச் சேகரிப்பதில் வல்லவர். இவர் வலி தெரியாமல் ஊசிபோடும் மருத்துவரைப் போல் நேர்காணல் அளிப்பவரிடமிருந்து செய்திகளைச் சேகரிப்பார். ஒருமுறை வெண்பன்றி வளர்ப்பவரிடம் நேர்காணல் நிகழ்த்தச் சென்ற இவர், 'என்ன தொழில் பார்க்கறீங்க?' என்று கேட்டார். அதற்கு அவர், 'வெண்பன்றி வளர்க்கிறேன்' என்று பதிலளித்தார். 'பன்றியா வளர்க்கறீங்க?' என்று கிண்டலாகக் கேட்டபொழுது, அவருக்கு கோபம் வந்துவிட்டது. 'பன்றி வளர்ப்பது அவ்வளவு கேவலமா? பன்றி வளர்ப்பால் என்னென்ன நன்மைகள் என்று தெரியுமா? எவ்வளவு வருமானம் கிடைக்கிறது என்பது தெரியுமா?' என அடுக்கடுக்காகக் கூறி, பன்றி வளர்ப்பின் பயனையும், முறையையும் கூறினார். இவ்வாறு செய்திகளைப் பெறுவதில் இவர் புதுமையான அணுகுமுறையைக் கையாண்டார்.



இவர் சிறந்த புகைப்படக் கலைஞராகவும் திகழ்ந்தார். பயிர்களின் இடையில் மறைந்திருக்கும் பூச்சிகளையும் மிகவும் தெளிவாகப் படம் எடுத்துவிடுவார். இவரால் எடுக்கப்பட்ட பூச்சிகளின் புகைப்படங்கள் இன்று பல ஆய்வுக்கூடங்களிலும் வேளாண் அலுவலகங்களிலும் ஆவணமாக வைத்துப் பராமரிக்கப்படுகின்றன.

இவர் துணிவும் தன்னம்பிக்கையும் மிக்கவர். வானொலியின்மீதும் விவசாயிகள் மீதும் அளவுகடந்த பற்றுள்ளவராகத் திகழ்ந்தார். இவருடைய பண்ணை இல்லம் நிகழ்ச்சி உழவுத் தொழில் செய்யும் மக்களுக்கு அதிக வருவாயை ஈட்டுவதற்கான வழிகாட்டும் நிகழ்ச்சியாக அமைந்திருந்தது.



12th ADVNCEl Tamil - Chap 5&6.indd 233 14-04-2020 18:51:57

## இவரைத் தெரியுமா?



"ஆகாசவாணி, செய்திகள் வாசிப்பது சரோஜ் நாராயணசுவாமி" என்ற குரலை வானொலியில் கேட்காத தமிழர்கள் இருக்க முடியாது. இவருடைய குரலைக் கேட்பதற்காகவே செய்தியைக் கேட்டவர்கள் உண்டு. 40 ஆண்டுகாலம் ஒலிபரப்புத் துறையில் சிறப்பாகச் செய்தி வாசித்தமைக்காகத் தமிழக அரசு இவருக்கு 2008 ஆம் ஆண்டு கலைமாமணி விருது வழங்கிப் பாராட்டியுள்ளது. இதுவே செய்தி வாசிப்பாளருக்காக வழங்கப்பட்ட முதல் கலைமாமணி விருதாகும்.

# கலைச்சொற்கள்

| | |
|---|---|
| Advertisement | – விளம்பரம் |
| Analog | – மின்னியல் |
| Anchor | – தொகுப்பாளர் |
| Antenna | – ஒலிவாங்கி |
| Audio Engineer | – ஒலி அமைப்பாளர் |
| Audio wave | – ஒலியலை |
| Audiozone | – ஒலி மையம் |
| Bandwidth | – அலைத்தொகுப்பு |
| Binaural | –இருசெவிக் கேள்வி |
| Blogspot | – வலைப்பூ |
| Broadcast | – ஒலிபரப்பு |
| Channel | – அலைவரிசை |
| Commands | – கட்டளைகள் |
| Control Room | – கட்டுப்பாட்டு அறை |
| Disc Jockey | – இசைப்பாடல் ஒலிபரப்பாளர் |
| Disk | – வட்டு |
| Distortion | – சிதைவு |
| Echo | – எதிரொலி |
| Electronic effects | – மின்னணு உத்திகள் |
| Electronic Media | – மின்னணு ஊடகம் |
| Facebook | – முகநூல் |
| Flash News | – விரைவுச் செய்தி |
| Frequency | – அலைவரிசை |
| Frequency Modulation | – பண்பலை |
| Head set | – தலையணி பேசி |
| High Frequency | – உயர் அதிர்வெண் |
| Intercom | – தகவல் சாதனம் |
| Live | – நேரலை |
| Loudspeaker | – ஒலிபெருக்கி |
| Low Frequency | – குறைந்த அதிர்வெண் |
| Mass media | – மக்கள் ஊடகம் |
| Medium | – ஊடகம் |
| Multi media | – பல்லூடகம் |
| Multi Track | – பல்வழித் தடம் |
| On–Air | – ஒலிபரப்பில் |
| Outside Broadcast | – வெளிப்புற ஒளிபரப்பு |
| Print Media | – அச்சு ஊடகம் |
| Producer | – தயாரிப்பாளர் |
| Radio Jockey | –வானொலிவருணனையாளர் |
| Radio–club | – வானொலிக் குழு |
| Recording Theatre | – ஒலி–ஒளிப்பதிவு அரங்கு |
| Signals | – சமிக்ஞைகள் |
| Sponsor | – விளம்பரதாரர் |
| Technical Director | – தொழில்நுட்ப இயக்குநர் |
| Telecast | – ஒளிபரப்பு |
| Tele–Club | – தொலைக்காட்சிக் குழு |
| Tempo | – அங்கவேகம் |
| Transmiting Tower | – ஒளிபரப்புக் கோபுரம் |
| Transparent | – ஒளி ஊடுருவக் காட்சி |
| Twitter | – கீச்சகம் |
| Video Jockey | –காணொலிவருணனையாளர் |
| Video Streaming | – படக்காட்சி இறக்கம் |
| Voice Booth | – ஒலியறை |
| Virtual | – இணையவழி |
| Whatsapp | – புலனம் |



12th ADVNCEl Tamil - Chap 5&6.indd 234 14-04-2020 18:51:57

# கண்ணாடி

87GZY1

**பலவுள் தெரிக.**

1. மார்கோனி தான் கண்டுபிடித்த கம்பியில்லாத் தந்தி முறையினை இங்குப் பதிவு செய்துகொண்டார்.

   அ) இலண்டன் ராயல் குழுமம் ஆ) இங்கிலாந்து அறிவியல் கழகம்

   இ) அமெரிக்க அறிவியல் கழகம் ஈ) இந்திய அறிவியல் கழகம்

2. வானொலியின் தந்தை என்று அழைக்கப்படுபவர்

   அ) மார்கோனி ஆ) ஜான் லூகி பெயர்டு இ) எடிசன் ஈ) பெஞ்சமின்

3. கூற்று: பூமியானது கோளவடிவில் இருப்பதால் வானொலி நிகழ்ச்சிகளையும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளையும் செயற்கைக்கோள்கள் துணையின்றித் தொலைதூரத்திற்குப் பரப்புவது என்பது மிகவும் கடினமான ஒன்றாக உள்ளது.

   காரணம் : ஒலிஒளி அலைகள் எப்போதும் நேர்க்கோட்டில் செல்லும் தன்மை கொண்டவை.

   அ) கூற்று சரி, காரணம் தவறு ஆ) கூற்று சரி, காரணம் சரி

   இ) கூற்று தவறு, காரணம் சரி ஈ) கூற்று தவறு, காரணம் தவறு

4. பேரிடர்க் காலத்தில் பெரிதும் பயன்படுவது

   அ) தொலைக்காட்சி ஆ) அலைபேசி இ) ஹாம் வானொலி ஈ) இணையம்

5. முதல் தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒளிபரப்பப்பட்ட இடம்

   அ) இலண்டன் ஆ) சென்னை இ) வாசிங்டன் ஈ) பீஜிங்

6. தவறான இணையைச் சுட்டுக.

   அ) ர.அய்யாசாமி – பாலராமாயணம் ஆ) முத்துக்கூத்தன் – பண்ணை இல்லம்

   இ) வெ.நல்லதம்பி – எதிரொலி ஈ) கோ.சுவாமிநாதன் – இன்று ஒரு தகவல்

7. சரியான விடைக் குறிப்பினைக் கண்டறிக.

   1) அமெரிக்காவில் முதல் வண்ணத் தொலைக்காட்சி ஒளிபரப்பு தொடங்கப்பட்டது.

   2) அமெரிக்காவின் ஆம்பெக்ஸ் நிறுவனம் காட்சிகளைப் பதிவுசெய்து தேவைப்படும்போது ஒளிபரப்பும் ஒளிப்பதிவு நாடா (வி.டி.ஆர்) கருவியினைக் கண்டுபிடித்தது.

   3) 1976 ஆம் ஆண்டு தொலைக்காட்சியில் பெண்களுக்கான சிறப்பு நிகழ்ச்சி ஒளிபரப்புத் தொடங்கப்பட்டது.

   4) 24 மணி நேரமும் செய்திகளை ஒளிபரப்பும் தொலைக்காட்சி நிலையங்களில் 'மின்னணு செய்தி சேகரிப்பு வாகனம்' இயங்கி வருகிறது.

   அ) 1,2,3 சரி 4 தவறு ஆ) 1, 2, 4 சரி 3 தவறு இ) 1,3,4 சரி 2 தவறு ஈ) 2, 3, 4 சரி 1 தவறு

8. 'நுபுர் க ஸ்வர்' என்ற பெயரில் இந்தியில் மொழிபெயர்க்கப்பட்டுப் புதுதில்லி வானொலியில் ஒலிபரப்பான காப்பிய நாடகம்.

அ) சிலப்பதிகாரம் ஆ) மணிமேகலை இ) சீவக சிந்தாமணி ஈ) குண்டலகேசி

9. கீழ்க்காண்பனவற்றுள் எவை ஆபாச வெளியீட்டுத் தடைச்சட்டத்தின்படி தண்டனைக்குரியவை

1) நாகரிகமற்ற வார்த்தைகள் 2) நீதிமன்றத் தீர்ப்பை விமர்சித்தல்

3) பாலினத்தை இழிவுபடுத்தும் கருத்துகள்

4) ஒருவரை அவமதிக்கும் நோக்கத்தோடு எழுதுவது

அ. 1, 2, 3 சரி 4 தவறு ஆ) 1, 3, 4 சரி 2 தவறு

இ) 1, 3 சரி 2, 4 தவறு ஈ) 1, 4 சரி 2, 3 தவறு

10. "ராமாயணக்கதையினை தமிழகத்துச் சிறுவர் சிறுமியர் விரும்பிப் படிக்கும் வண்ணம் இனிய எளிய நடையில் ஒரு தொடர்நிலைச் செய்யுளாகப் பாடுமாறு நான் தமிழ்க் கவிஞர்களைக் கேட்டுக்கொள்கிறேன்" என்றவர்

அ) ர. அய்யாசாமி ஆ) பாரதிதாசன் இ) கவிமணி ஈ) தென்கச்சி கோ. சுவாமிநாதன்

11. பாவைக்கூத்து என்று அழைக்கப்படும் கிராமியக் கலை

அ) பொம்மலாட்டம் ஆ) கரகாட்டம் இ) சிலம்பாட்டம் ஈ) காவடியாட்டம்

12. வானொலி, தொலைக்காட்சி ஆகியவற்றை மேலாண்மை செய்யும் அமைப்பு

அ) மத்திய திரைப்படத் தணிக்கைக் குழு

ஆ) இந்தியத் தொலைத்தொடர்பு ஒழுங்குமுறை ஆணையம்

இ) பிரசார் பாரதி ஈ) விவித பாரதி

13. சரியான இணையைக் கண்டறிக

1) மார்கோனி– வானொலி 2) ஜான் லெகி யெர்டு–அலைபேசி

3) ஆம்பெக்ஸ் நிறுவனம் – ஒளிப்பதிவு நாடா 4) பெர்டினாண்ட் பிரவுன் – இணையம்

அ) 1, 2, 3 சரி 4 தவறு ஆ) 2, 3, 4 சரி 1 தவறு

இ) 1, 3 சரி 2, 4 தவறு ஈ) 2, 3 சரி 1, 4 தவறு

14. தவறான கூற்றைச் சுட்டுக.

அ) புதிதாகத் தனியார் தொலைக்காட்சி நிலையங்கள் தொடங்க மத்திய அரசிடம் உரிமம் பெறவேண்டும்.

ஆ) இயற்கைப் பேரிடர்க் காலங்களில் மக்கள் தகவல்களைப் பெறுவதற்கு ஹாம் வானொலி பயன்படுகிறது.

இ) பண்பலை நிகழ்ச்சியின் தொகுப்பாளரை ரேடியோ ஜாக்கி என்று அழைப்பர்.

ஈ) உரைச்சித்திரம் என்பது வானொலியில் வழங்கப்படும் நாடக வடிவமாகும்.



12th ADVNCEl Tamil - Chap 5&6.indd 236 14-04-2020 18:51:57

15. பொருத்துக

| | | |
|---|---|---|
| 1. | பொன் விளையும் பூமி | - அ) சிறுவர் நிகழ்ச்சிகள் |
| 2. | கண்மணிப் பூங்கா | - ஆ) நேயர் கடிதங்கள் |
| 3. | எதிரொலி | - இ) நன்னெறிக் கதைகள் |
| 4. | இன்று ஒரு தகவல் | - ஈ) வேளாண் நிகழ்ச்சிகள் |

அ) 1-ஆ, 2-இ, 3-ஈ, 4-அ

ஆ) 1-ஆ, 2-அ, 3-ஈ, 4-இ

இ) 1-இ, 2-அ, 3-ஈ, 4-ஆ

ஈ) 1-ஈ, 2-ஆ, 3-இ, 4-அ

16. மோகன காந்தி என்னும் வானொலி நிகழ்ச்சியை வழங்கியவர்

அ) வெ. நல்லதம்பி ஆ) முத்துக்கூத்தன்

இ) ர. அய்யாசாமி ஈ) துகிலி சுப்பிரமணியம்

17. சித்திரிப்பு என்னும் சொல்லடியாகத் தோன்றிய சொல்

அ) உரைச்சித்திரம் ஆ) சித்திரம்

இ) வானொலி உரைச்சித்திரம் ஈ) தொலைக்காட்சி உரைச்சித்திரம்

18. பாலராமாயணம் என்ற வானொலி நிகழ்ச்சிக்கு இசை அமைத்தவர்.

அ) டி.கே. பட்டம்மாள் ஆ) எஸ். ராஜம் இ) மல்லிக் ஈ) முத்துக்கூத்தன்

19. ரேடியோ என்ற சொல்லுக்கு வானொலி என்ற தமிழ்க் கலைச்சொல்லை உருவாக்கி அளித்தவர்

அ) வெ. நல்லதம்பி ஆ) தென்கச்சி கோ. சுவாமிநாதன்

இ) டி.கே. சிதம்பரனார் ஈ) டி.கே. பட்டம்மாள்

## குறுவினா

1. மின்னணு ஊடகங்கள் என்று அழைக்கப்படுபவை எவை?
2. உலகத்தின் முதல் வானொலி எங்கு எப்பொழுது தொடங்கப்பட்டது?
3. நேயர் கடிதங்கள் - குறிப்பு வரைக.
4. படப்பதிவறை என்றால் என்ன?
5. மின்னணு செய்தி சேகரிப்பு வாகனம் என்றால் என்ன?
6. பதிப்புரிமைச் சட்டம் என்றால் என்ன?
7. பெருநிறுவன வழக்குரைஞர் என்பவர் யார்?



12th ADVNCEl Tamil - Chap 5&6.indd 237 14-04-2020 18:51:57

## சிறுவினா

1. நடமாடும் ஒளி–ஒலிப்பதிவுக்கூடம் என்றால் என்ன?
2. நீதிமன்ற அவமதிப்புச் சட்டம் குறித்து எழுதுக.
3. வானொலி மொழிநடை குறித்து எழுதுக.
4. வானொலியில் வழங்கப்படும் உழவர்களுக்கான நிகழ்ச்சிகள் யாவை?
5. தொலைக்காட்சி நிகழ்ச்சியில் தொகுப்பாளரின் பங்கு குறித்து எழுதுக.
6. தொலைக்காட்சியில் ஒளிபரப்பாகும் இலக்கியநிகழ்ச்சிகளுள் எவையேனும் ஐந்தனைக் கூறி விளக்குக.

## நெடுவினா

1. வானொலி உரைச்சித்திரம் குறித்து விரிவாக எழுதுக.
2. வானொலி மற்றும் தொலைக்காட்சியின் பொது அமைப்புக் குறித்து விவரி?
3. தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் குறித்து விரிவாக எழுதுக.
4. உங்கள் பள்ளியில் நடைபெறும் புத்தகக் கண்காட்சியின் தொடக்க விழாவிற்கு நிகழ்ச்சித் தொகுப்புரை எழுதுக.
5. ஊடகச் சட்டங்களுள் எவையேனும் ஐந்து சட்டங்கள் குறித்து எழுதுக.

## படிப்போம் பயன்படுத்துவோம்

அதிக ஊதியம் பெறும் பெருநிறுவனத்தின் பணியினைத் துறந்து இயற்கை விவசாயம் செய்து வரும் பொறியியல் பட்டதாரி இளைஞர் ஒருவரிடம் நேர்காணல் நடத்துவதற்கான

## மாதிரி வினாத்தொகுப்பு

1. நீங்கள் அதிக ஊதியம் கிடைக்கும் பணியினைத் துறந்தமைக்கான காரணம் என்ன?
2. விவசாயத் தொழிலின் மீது ஆர்வம் ஏற்படக் காரணம் யாது?
3. தங்களுக்கு விவசாயம் பற்றிய முன் அனுபவம் உண்டா?
4. இயற்கை விவசாயத்தின் மூலம் அதிக மகசூலை ஈட்ட முடியும் என நினைக்கிறீர்களா?
5. செயற்கை உரங்களைப் பயன்படுத்துவதால் ஏற்படும் தீமைகள் பற்றி உங்களால் கூற முடியுமா?
6. தாங்கள் விவசாயம் செய்யும் பகுதிகளில் இயற்கை உரம் கிடைக்கிறதா?
7. நன்செய் நிலத்தில் செய்யும் ஊடுபயிர் பற்றிக் கூறுங்களேன்.
8. உங்கள் பகுதிகளில் என்னென்ன புன்செய் பயிர்கள் பயிரிடப்படுகின்றன?
9. உங்கள் பகுதியில் விளையும் பொருட்களைக் கொள்முதல் செய்வதற்கு விற்பனைக் கூடங்கள் உள்ளனவா?
10. வேளாண் தொழில் செய்வோருக்கு ஏதேனும் ஆலோசனை கூற விரும்புகிறீர்களா?



12th ADVNCEI Tamil - Chap 5&6.indd 238 14-04-2020 18:51:57

## மாதிரி நிகழ்ச்சித் தொகுப்புரை

*மாவட்ட விளையாட்டு அரங்கம் இன்று புதுபொலிவோடு காணப்பட்டது. மாவட்டத்தின் பல்வேறு பள்ளிகளில் இருந்து மாணவர்கள் மகிழ்வோடு வந்தவண்ணம் இருந்தனர். வழியெங்கும் வண்ணக் கோலங்களும் மாவிலைத் தோரணங்களும் புன்னகையோடு அனைவரையும் வரவேற்றன. பெரிய வரவேற்புப் பலகை ஒன்று வைக்கப்பட்டிருந்தது. அதில் மாவட்ட ஆட்சியாளர் அவர்களால் இளம் சாதனையாளர்களுக்கான விருது வழங்கும் விழா என்ற வாசகம் மனத்தை மகிழ்விக்கும் வகையில் அமைந்திருந்தது.*

*விழா மேடையினை வண்ண விளக்குகள் அலங்கரித்துக்கொண்டிருந்தன. விழா நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்குவதற்காக 12 ஆம் வகுப்பு மாணவி மலர்விழி வரவழைக்கப்பட்டிருந்தார்.*

*மாணவர்களும், பெற்றோர்களும் பார்வையாளர்களும் ஆவலோடு எதிர்பார்த்த விழா தொடங்கியது.*

*விழா தொகுப்பாளர் மலர்விழி ஒலிவாங்கியைக் கையில் ஏந்தியவாறு மேடையில் பேசத் தொடங்கினார்*

*மலர்விழி: வருங்கால இந்தியாவின் சாதனை மலர்களாய் மணம் வீசக் காத்திருக்கும்*

*மாணவ சகோதர சகோதரிகளே! சாதனையாளர்களை ஈன்றெடுத்த*

*பெற்றோர்களே! இவ்விழாவினைக் காண வந்துள்ள நல் உள்ளங்களே! ஊடக*

*அன்பர்களே! உங்கள் அனைவருக்கும் என் பணிவான வணக்கம்.*

*தற்பொழுது மாவட்ட அளவில் பல்வேறு துறைகளில் சாதனைகள் புரிந்த இளம் சாதனையாளர்களுக்கான விருது வழங்கும் விழா நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.*

*நிகழ்ச்சியில் முதலாவதாகத் தமிழ்த்தாய் வாழ்த்து*

*(அனைவரும் எழுந்து நின்று தமிழ்த்தாய் வாழ்த்து பாடுகின்றனர்)*

*மலர்விழி: விழாவிற்கு வருகை தந்துள்ள அனைவரையும் வரவேற்க நமது மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் ஐயா அவர்களை அழைக்கிறேன்.*

*(முதன்மைக் கல்வி அலுவலர் அவர்கள் வரவேற்புரை நிகழ்த்துகிறார்.)*

*மலர்விழி: வரவேற்புரை வழங்கிய முதன்மைக் கல்வி அலுவலர் ஐயா அவர்களுக்கு நன்றி. அடுத்ததாக பூஞ்சோலை அரசு உயர்நிலைப் பள்ளி மாணவிகள் பரதநாட்டியப் பாடலுக்கு வரவேற்பு நடனம் ஆடி நம்மை மகிழ்விக்க வருகின்றனர்.*

*(மாணவிகளின் நடன நிகழ்ச்சி)*

*மலர்விழி: குட்டித் தேவதைகள் நம் அனைவரையும் இசை உலகிற்கு அழைத்துச் சென்று இன்ப வெள்ளத்தில் நீந்த வைத்துவிட்டனர். நம் அனைவரின் கரவொலியினை அவர்களின் நடனத்திற்கு பரிசளிப்போம்.*

*அடுத்ததாக, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் விழாப் பேருரையாற்றி இளம் சாதனையாளர்களுக்கு விருதுகளை வழங்க வருகிறார்.*

*(மாவட்ட ஆட்சியர் அவர்களின் விழாப் பேருரை)*

மலர்விழி: துவண்டுபோன உள்ளங்களிளெல்லாம் தமது உரையின்மூலம் தன்னம்பிக்கை விதையினை தூவிய ஆட்சியர் ஐயா அவர்களுக்கு நம் அனைவரின் சார்பாக நன்றியினைத் தெரிவித்துக்கொள்வோம்.

நாளைய பாரதத்தின் நம்பிக்கை நாயகர்களான இளம் சாதனையாளர்களை ஆட்சியர் அவர்களின் பொற்கரங்களால் விருதுகளைப் பெற அழைக்கிறேன்.

மலர்விழி: மாசுபடாத மனத்தில் துன்பங்கள் இருப்பதில்லை மாசுபடாத மண்ணில் நோய்கள் இருப்பதில்லை; இந்த உண்மையை உணர்ந்தே மகாத்மா காந்தியடிகளும் குப்பைகளை எங்குக் கண்டாலும் தாமே தூய்மை செய்வார். அவரின் வழித்தோன்றலாக, தாம் வாழும் சூழலில் தொடர்ந்து தூய்மையைக் கடைபிடித்துவரும் மாணவி கனியமுது அவர்களை இந்த ஆண்டின் சிறந்த தூய்மையாளர் விருதினைப் பெற அழைக்கிறேன்.

(துய்மையாளர் விருது வழங்கப்படுகிறது)

மலர்விழி: விளையாட்டு மைதானங்கள் வீரர்களை உருவாக்குகின்றன. நூலகங்கள் சிந்தனையாளர்களையும் சான்றோர்களையும் அறிவியலாளர்களையும் உருவாக்குகின்றன. இலண்டன் நூலகத்தில் அதிக அளவிலான புத்தகங்களைப் படித்தவர்கள் என்ற பெருமைக்குரியவர்கள் இருவர். அதில் ஒருவர் நமது நாட்டின் சட்டமேதையான டாக்டர் அம்பேத்கர். மற்றொருவர் இலண்டனைச் சார்ந்த காரல்மார்க்ஸ். நமது மாவட்டத்தில் அதிக புத்தகங்களை வாசித்த மாணவன் வான்நிலவன் அவர்கள் இந்த ஆண்டிற்கான சிறந்த படிப்பாளர் விருதினைப் பெறுகிறார்.

(படிப்பாளர் விருது வழங்கப்படுகிறது)

மலர்விழி: பாலையூர் கிராமத்தில் நடைபெற்ற நாட்டுநலப் பணித் திட்ட மருத்துவ முகாமில் மக்களுக்கு அன்னை தெரசாவைப் போல் சிறந்த தொண்டாற்றிய நம் கார்குழலி அவர்களை இந்த ஆண்டிற்கான சிறந்த தொண்டாளர் விருதினைப் பெற அழைக்கிறேன்.

(சிறந்த தொண்டாளர் விருது வழங்கப்படுகிறது)

மலர்விழி: இயற்கையைப் போற்றிய நம்மாழ்வார் போல பள்ளி வளாகத்தைத் தம் உழைப்பால் பசுமை நிறைந்த சோலையாக மாற்றிய தாமரைக்கண்ணன் அவர்களைச் சிறந்த பசுமையாளர் விருதினைப் பெற அழைக்கிறேன்.

(சிறந்த பசுமையாளர் விருது வழங்கப்படுகிறது)

மலர்விழி: அடுத்ததாக காவூர் அரசு மேல்நிலைப் பள்ளி மாணவன் கவியரசன் அவர்கள் இயற்கையைப் போற்றும் இனிய பாடல் ஒன்றைப் பாடி நம்மை மகிழ்விக்க வருகிறார்.

(கவியரசன் பாடலைப் பாடுகிறார்)

மலர்விழி: தமது இசைப் பாடலால் நம்மையெல்லாம் தாலாட்டிய கவியரசன் அவர்களுக்கு நன்றி. அடுத்ததாக பண்பாளர் விருது. பண்புடையவர்கள் வாழ்வதால்தான் இவ்வுலக உயிர்கள் மகிழ்ச்சியைக் காண்கின்றன. தமது மனிதப் பண்பால் மக்களின் மனத்தில் இடம் பிடித்த அப்துல் காலம் போல பிறர் மனம் புண்படாமல் பல நற்செயல்கள் புரிந்த பண்பாளர் பாவேந்தன் அவர்களுக்கு இந்த ஆண்டிற்கான சிறந்த பண்பாளர் விருது வழங்கப்படுகிறது.

(பாவேந்தன் பண்பாளர் விருது பெறுகிறார்)

மலர்விழி: அடுத்ததாக, சாலை விபத்துகளைத் தடுக்கும் வாகன வேகத்தடைக் கருவியைக் கண்டுபிடித்தமைக்காக தமிழரசன் அவரகளுக்கு இளம் அறிவியலாளர் விருது வழங்கப்படுகிறது.

(தமிழரசன் இளம் அறிவியலாளர் விருது பெறுகிறார்)



12th ADVNCEl Tamil - Chap 5&6.indd 240 14-04-2020 18:51:57

*மலர்விழி:* நிகழ்ச்சியின் நிறைவாக, நாட்டின் ஒற்றுமையை உணர்த்தும் தேசப்பற்றுமிக்க பாடலுக்கு உறையூர் அரசு மேல்நிலைப் பள்ளி மாணவர்கள் நடனமாட வருகின்றனர் .

(மாணவர்களின் நடன நிகழ்ச்சி)

*மலர்விழி:* உறையூர் பள்ளி மாணவர்கள் ஐந்து மணித்துளிகள் நம்மையெல்லாம் தங்களது நடனத்தால் உறையவைத்துவிட்டார்கள். அந்த மாணவச் செல்வங்களை நம் கரவொலியால் வாழ்த்துவோம். நிறைவாக மாவட்டக் கல்வி அலுவலர் ஐயா அவர்கள் நன்றியுரையாற்ற வருகிறார்.

(மாவட்டக் கல்வி அலுவலர் அவர்களின் நன்றியுரை)

*மலர்விழி:* நிழ்ச்சியின் நிறைவாக நாட்டுப்பண்

(அனைவரும் எழுந்து நின்று நாட்டுப்பண் பாடுகின்றனர்)

குறிப்பு : சூழ்நிலைக்கேற்ப, சுவையான வருணனைகளைச் சேர்த்து வழங்கும் தொகுப்பாளரின் உத்திகள் நிகழ்ச்சியினைச் சிறப்பாக்க உதவும்

### மாதிரி தொலைக்காட்சி விளம்பரம்

மகன்: அம்மா, என்னால முன்னமாதிரி படிக்கமுடியல விளையாட்டுப்போட்டியில்கூட கடைசியாதான் வர்றேன். ரொம்பவும் சோர்ந்து போயிடுறேன்ம்மா.

அம்மா: பாக்கெட்டில் அடைச்சு வைக்கிற செயற்கை சுவையூட்டிகள் கலந்த பொருளையும் உணப்பொருள்களை வாங்கி சாப்பிடாதீங்க, இயற்கையாக விளைந்த பொருட்களைக் கொண்டு நம்ம ஊர்ல தயாரிக்கப்படுகிற xxxxxxxxxxx ஐ சாப்பிடுங்கன்னு சொன்னா கேட்டாதான.

மகன்: இனிமே நான் xxxxxxxxxxx ஐ சாப்பிடுறேன்மா

அம்மா: இப்பத்தான் நீ நல்ல பையன்

(ஓர் ஆண்டிற்குப் பிறகு)

மகன்: அம்மா நான் எல்லாப் பாடங்களிலும் 100க்கு 100 மதிப்பெண் வாங்கிட்டேன்மா. அதமட்டுமல்ல எங்க பள்ளியில் நடந்த எல்லா விளையாட்டுப் போட்டிகளிலும் நான்தான்மா முதல் பரிசு.

அம்மா: இப்போ தெரியுதா xxxxxxxxxxx இன் மகிமை (பொருளைத் திரையில் காட்டுதல்)

உங்கள் குழந்தைகள் நல்லா படிக்கணும்னு நினைக்கிறீங்களா ! எல்லா விளையாட்டிலும் முதல்ல வரணும்னு ஆசைப்படறீங்களா. இன்றே வாங்குவீர் xxxxxxxxxxx (பொருள் திரையில் தோன்றி மறைகிறது)

## பயிற்சி வினாக்கள்

1. உங்கள் பள்ளி ஆண்டுவிழாவிற்குத் தொகுப்புரை தயாரித்து வழங்குக.
2. கோ-ஆப்டெக்ஸ் துணிக்கடைக்கு தொலைக்காட்சி விளம்பரம் தயாரிக்க.
3. மாவட்ட ஆட்சியரக மக்கள் தொடர்பு அலுவலரிடம் நேர்காணல் நிகழ்த்துவதற்காக வினாத்தொகுப்பு தயார் செய்க.

## செயல்திட்டம்

1. கல்வித் தொலைக்காட்சிக்கு உங்கள் பள்ளியின் சார்பில் ஒரு மணி நேரத்திற்கான கல்வி நிகழ்ச்சியினைத் தயாரித்து வழங்குக.
2. செய்தித்தாள்களில் வந்துள்ள செய்திகளைத் தொகுத்துத் தொலைக்காட்சி/வானொலி செய்தியாக வகுப்பறையில் வாசித்துக்காட்டுக.



12th ADVNCEl Tamil - Chap 5&6.indd 241 14-04-2020 18:51:57

## இணையச்செயல்பாடு

# ஊடகவியல்

**இந்தச் செயல்பாடுகள்மூலம் வானொலி செய்திகளைக் கேட்க மற்றும் தரவிறக்கம் செய்ய அறியலாம்.**




### படிகள்

1. கீழ்க்காணும் உரலி விரைவுக்குறியீட்டைப் பயன்படுத்தி, இச்செயல்பாட்டிற்கான இணையப் பக்கத்திற்குச் செல்க.
2. ஒரு பக்கத்தைத் திறந்தால் அதில், பல மொழிகள் செய்தி கேட்கும் விதமாக இருக்கும். அதில் கீழே நகர்த்தி விரும்பும் மொழியைத் தேர்வு செய்து, செய்தியினைக் கேட்கலாம்.
3. அதே பக்கத்தில் செய்தியினைத் தரவிறக்கம் செய்தும் கேட்கலாம்.

### செயல்பாட்டின் படிநிலைக்கான படங்கள் :



படி 1



படி 2



படி 3

வானொலி செய்தி கேட்பதற்கான இணையப் பக்கத்தின் உரலி :

http://www.newsonair.com/nsd-audio.aspx

B282_12_ADV_TAMIL

* படங்கள் அடையாளத்திற்கு மட்டுமே.